Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 28 இதழ் - 8 ஆகஸ்ட் 2015

தனிப்பிரதி
ரூ.10/-

வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது.
ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது.
(சங்கீதம் 19 : 1)

# கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்



காங்கயம் கிறிஸ்துவின் சபையின் மூத்த விசுவாசியும், காங்கயம் சபை ஊழியத்தின் காரியங்களில் பக்க பலமாக இருந்து, அஞ்சல்வழிக் கல்வியை பொறுப்பேற்று சிறப்பாக நடத்தியவரும், எங்கள் குடும்பத்திற்கு நெருக்கமாக இருந்தவருமான மரியாதைக்குரிய M. பால்மாணிக்கம் ஐயா அவர்கள் கடந்த 31.7.2015 அன்று மாலை பரலோகத்தின் தேவனாலே அடுத்த வாழ்வுக்கு அழைத்து கொள்ளப்பட்டார் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

**குடும்பத்தாருக்காக ஜெபிக்கும்படி வேண்டுகிறோம்.**

- சபை ஊழியர், மற்றும் இதழ் ஆசிரியர்

## ஆசானின் அறிவுரையிலே ...


1. ஆசிரியர் உரை 3
2. ஏன் அஸ்திபாரம் மிக முக்கியமானதாக ... 12
3. பெண்கள் பகுதி 18
4. வாலிபர் பகுதி 21
5. சிறுவர் பகுதி 24
6. வேத வாக்கியங்களை ஆராய்ந்து ... 26
7. நாம் தேவனை கோபப்படுத்தலாமா ? 29
8. நல்ல சமாரியன் 33


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்கு தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- **இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.**
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை/அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

THIRUMARAI AASAAN

**S. Rajanayagam**
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

**Pleading for the restoration of pure New Testament Christianity**

Vol. 28 August - 2015 Issue - 8

ஆசிரியர் உரை

## பிறரால் குற்றம் சுமத்தப்படுவோம்

ஏதாவது ஒரு காரணத்தினிமித்தமாகவும், சூழ்நிலையினிமித்தமாகவும் விரும்பியோ அல்லது விரும்பாமலோ ஏதாவது ஒருவகையான குற்றம் இழைப்பதென்பது மானிடர் எல்லோரிடமும் காணப்படும் பொதுவான ஒரு பெலவீனமே. ஒருவேளை, அப்படி இழைக்கப்படும் குற்றங்களின் தன்மையில் ஏற்ற இறக்கங்கள் இருக்கலாமேயொழிய மற்றபடி எந்தவொரு குற்றத்திற்கும் இவர் அப்பாற்பட்டவர் என்று நாம் எந்த ஒரு மனிதரையும் சுட்டிக்காட்டி விட முடியாது. இது தான் மானிடம் சம்பந்தமாக ஆதிகாலந்தொட்டு இருந்துவரும் ஒரு மாறாத நியதி.

ஒருவேளை, மானிடத்தின் அவலநிலை இப்படியாக இருந்தாலும், எந்தவொரு மனிதனும் தான் பிறரால் குற்றம் சாட்டப்படுவதை விரும்புவதில்லை. சாட்டப்படும் குற்றத்திற்கான முகாந்திரம் வலுவாக இருந்தால் கூட, எப்படியாவது அதை மறுப்பதற்கான கைங்காரியங்களில் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ தன்னை ஈடுபடுத்துவானே தவிர, மற்றபடி குற்றத்தைப் பெரும்பாலும் பெருந்தன்மையோடு ஒத்துக்கொள்வதில்லை. இதுதான் நாம் வாழும் சமுதாயத்தின் யதார்த்த நிலை. நான் கூறும் இக்கூற்றின் மீது குற்றம் சுமத்த அதிக வாய்ப்பில்லை என்று நம்புகிறேன்.

காரியங்கள் இப்படியாக இருந்தாலும், மானிடத்தைப் பாவத்தின் கோரப்பிடியிலிருந்து மீட்கும்படியாக வந்த இயேசுவின் காலத்தில்

வாழ்ந்தவர்கள் மீது மறுப்பேதும் தெரிவிக்க முடியாத அளவில், கடுமையான குற்றம் சுமத்தப்படும் என்று வேதவசனங்கள் அறுதியிட்டுக் கூறுகிறது. ஆம், பழைய ஏற்பாட்டின் காலத்தில் வாழ்ந்த ஒரு புகழ்பெற்ற ஞானியும், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பேர்பெற்ற ஒரு பட்டணத்தின் மக்களும் ஒருசேர எழும்பி நின்று குற்றம் சுமத்துவார்கள் என்று இயேசு ஆண்டவர் கூறியுள்ளார். இப்படிக் கூறியிருப்பது இயேசு ஆண்டவராக இருக்கிறபடியால், அப்படி நடப்பதற்கான வாய்ப்பு உண்டா இல்லையா என்று வாதிடுவதற்கு வேலையே இல்லை. அப்படித்தானே!

சரி, அவர்கள் இயேசுவின் காலத்தில் வாழ்ந்தவர்கள் மீது எப்படிக் குற்றம் சுமத்துவார்கள் என்பதை அறிந்து கொள்வதற்து முன்பாக, நமது ஆசானின் ஆச்சாரப்படி அதற்கான பின்னணித் தகவல்களுக்குள்ளாகப் புகுந்து வெளியே வந்து விடுவோம்.

அந்த நாட்கள் பெலஸ்தீனா தேசமெங்கும் நன்மை செய்கிறவராக இயேசுவானவர் சுற்றித் திரிந்த ஏற்றமிகு நாட்கள். பிதாவின் சித்தம் நிறைவேற்றுவதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி மிகுந்த வல்லமையோடு ஊழியம் செய்து கொண்டிருந்த ஒரு காலகட்டம். அப்பொழுது பெத்தானியா என்னும் கிராமத்திற்கு இன்னும் ஒருமுறை சென்று, தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொள்ள மரியாளுக்குப் போதனை செய்துவிட்டு (லூக் – 10:38 – 42), பெயர் சொல்லப்படாத ஓரிடத்தில் தன்னுடைய வழக்கத்தின்படியாக ஜெபித்தார் (லூக். 11 : 1). அப்பொழுது எப்படி ஜெபிப்பது என்று தெரியாமலிருந்த இயேசுவின் சீடர்கள், யோவானைப் போன்று எங்களுக்கு ஜெபிக்கக்கற்றுத் தாரும் என்று இயேசுவிடம் கேட்டார்கள். அப்பொழுது ஒரு மாதிரி ஜெபத்தை இயேசு சீடர்களுக்குத் கற்றுக் கொடுத்தார். அது தான் பரமண்டல ஜெபம் என்று நம்மவர்களால் இன்று அழைக்கப்பட்டு, அர்த்தம் இல்லாமல் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஏறெடுக்கப்படுகிறது. பொருளில்லாமல் திரும்பத்திரும்பச் செய்யும்படியாக இயேசு இந்த ஜெபத்தைக் கற்றுக் கொடுக்கவில்லை. ஆயினும், புரிந்து கொள்ள வேண்டியவைகளைப் புரிந்து கொள்ளமாட்டோம் என்று பிடிவாதம் காட்டும் இன்றைய கிறிஸ்தவம், இந்த மாதிரி ஜெபத்தை கிளிப்பிள்ளையைப் போல சொல்லிக் கொண்டிருக்கிறது. பாவம்!

அங்கே ஜெபிக்கக் கற்றுக்கொடுத்த இயேசுவானவர், ஜெபத்தில் சீடர்கள் உறுதியாயிருக்க வேண்டுமென்பதற்கான இரண்டு உவமைகளையும் கூறினார் (லூக். 11 : 3 – 10; 11 – 13). தொடர்ந்து, அநேகர் ஆச்சரியப்படத்தக்க அளவில், வாய் பேச முடியாமல் பிசாசினால் கட்டப்பட்டிருந்த ஒருவனிடமிருந்த பிசாசைத் துரத்திப் பேச வைத்தார் (11 : 14). இயேசுவின் காரியங்களில் எப்போதும் தப்புக் கணக்குப் போடும் மானிடம், அங்கேயும் இயேசுவின் வல்லமை பற்றி தப்புக்

கணக்குப் போட்டு சந்தேகித்தது. ஆம் அங்கே ஒரு சாரார், தன்னுடைய வல்லமையை இயேசு நிரூபிக்கும்படி வானத்திலிருந்து ஓர் அடையாளம் வேண்டுமென்று கேட்டார்கள் ( 11 : 15, 16 ). அவர்கள் சந்தேகம் சுக்குநூறாகும்படியான ஒரு விளக்கத்தை இயேசு அங்கே கொடுத்தார் (11 : 17 –

விளக்கம் கொடுக்கப்பட்டுவிட்டாலும் கூட, தன்னுடைய தெய்வீகத்தையும், வல்லமையையும் அங்கீகரியாத அவர்களின் கேடான மனநிலை இயேசுவை வெகுவாகப் பாதித்தது. ஆகவே, சரியான சமயத்தை எதிர்பார்த்து, ஜனங்கள் திரளாய்க் கூடி வந்திருக்கிற பொழுது அவர் : இந்த சந்ததியார் பொல்லாதவர்களாயிருக்கிறார்கள். அடையாளத்தைத் தேடுகிறார்கள்: ஆனாலும் யோனா தீர்க்கதரிசியின் அடையாளமே அன்றி வேறே அடையாளம் அவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. யோனா நினிவே பட்டணத்தாருக்கு அடையாளமாக இருந்தது போல, மனித குமாரனும் இந்த சந்ததிக்கு அடையாளமாயிருப்பார் (லூக். 11 : 29, 30) என்றார். தன்னை ஏற்றுக் கொள்ள வேண்டியவர்கள், ஏற்றுக்கொள்ள வேண்டிய அளவு ஏற்றுக் கொள்ளாமலிருப்பது இயேசுவுக்கு எவ்வளவு மனபாரத்தை ஏற்படுத்துகிறதென்று எண்ணிப்பார்ப்பது இங்கே அவசியம்.

இவைகளுக்குப் பிறகு தான், தன்னுடைய வல்லமையை அங்கீகரியாத இந்தப் பொல்லாத சந்ததிக்கு என்ன நடக்கும் என்பதை எடுத்துரைத்தார். தென் தேசத்து ராஜஸ்திரீ சாலொமோனுடைய ஞானத்தைக் கேட்கப் பூமியின் எல்லைகளிலிருந்து வந்தாள்; இதோ, சாலொமோனிலும் பெரியவர் இங்கே இருக்கிறார். ஆதலால் நியாயத்தீர்ப்பு நாளிலே அந்த ராஜஸ்திரீ இந்தச் சந்ததியாரோடெழுந்து நின்று, இவர்கள் மேல் குற்றம் சுமத்துவாள் ( 11 : 31 ). யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு நினிவே பட்டணத்தார் மனந்திரும்பினார்கள்; இதோ, யோனாவிலும் பெரியவர் இங்கே இருக்கிறார்; ஆதலால், நியாயத்தீர்ப்பு நாளிலே நினிவே பட்டணத்தார் இந்தச் சந்ததியாரோடெழுந்து நின்று, இவர்கள் மேல் குற்றம் சுமத்துவார்கள் (11 : 32) என்றார்.

இப்படி இயேசு ஆண்டவரின் வாயிலிருந்து வெளிப்பட்ட வார்த்தைகளில், இந்நாளில் வாழக்கூடிய நமக்கான பாடங்கள் அடங்கியிருக்கிறபடியால், தென்தேசத்து ராணியும், நினிவே பட்டணத்தாரும் நம்மீது எப்படி குற்றம் சுமத்துவார்கள் என்று கவனிப்போம்.

1. தென் தேசத்து ராணி குற்றம் சுமத்துதல்

முதலாவது, நியாயத்தீர்ப்பு நாளில் எழுந்து நின்று குற்றம் சுமத்தக் காத்திருக்கும் தென்தேசத்து ராணியிடமிருந்து நமக்குப் கிடைக்கும் பாடங்கள் என்னவென்று பார்ப்போம்.

இந்தத் தென்தேசத்து ராணி, சேபாவின் ராஜஸ்திரீ என்றும் அழைக்கப்பட்டுள்ளாள் ( I ராஜா. 10 : 1 ). ஓர் ஊரில் ஒரு ராஜா / ராணி இருந்தார்கள் என்று கதை சொல்கிறார்களல்லவா அப்படிப்பட்ட ஒரு கற்பனைப் பாத்திரமல்ல இந்த ராணி. இவள் ஒரு சரித்திர நாயகி. கற்பனைக்கும் பரிசுத்த வேதாகமத்திற்கும் எவ்வித தொடர்பும் ஒருபோதும் இருந்ததில்லை, இப்பேருண்மை மனதின் ஆழத்தில் எப்போதும் இருக்க வேண்டும். சேபா என்பது அரேபியத் தீபகற்பத்தின் தெற்கே இருந்த ஒரு நாடு. சாலொமோனின் இஸ்ரவேல் நாட்டிலிருந்து சுமார் 1200 மைல் தொலைவில் இருந்துள்ளது. அக்காலத்தில் சாலொமோனின் புகழ் உச்சத்தில் இருந்தபடியால், அவன் கீர்த்தி அன்றைய உலகின் நான்கு திசைகளிலும் பரவியிருந்தது. வெகு தூரத்திலிருந்த (எரே. 6 : 20) தென்தேசத்து ராணிக்கும் இது போய்ச் சேர்ந்திருந்தது.

தென்தேசத்து ராணி சாலமோனின் கீர்த்தி பற்றியும், ஞானம் பற்றியும் என்னவெல்லாம் கேள்விபட்டாள், அவைகளை எப்படிக் கேள்விப்பட்டாள் என்ற விவரங்கள் நமக்குக் கொடுக்கப்படவில்லை. ஆயினும். கேள்விப்பட்டதற்குப் பிறகு அவளுக்கு நிலை கொள்ளவில்லை. ஆம், போய்ப் பார்த்து உண்மையைக் கண்டறிய வேண்டுமென்று முடிவெடுத்து, விடுகதைகளோடும், வெகுமதிகளோடும் புறப்பட்டு வந்தாள். ( I ராஜா. 10 : 12 ). அரேபியர்கள் பொதுவாக விடுகதைக்குப் பேர் போனவர்கள். விடுவிக்க முடியாதவைகளைப் பிறருக்கு சொல்லி அவர்களைத் திக்குமுக்காட வைத்து, அதில் இன்பம் காண்பதை விரும்புபவர்கள். ஆகவேதான், விடுகதைகள். இந்த வெகுமதிகள் அன்றைய காலத்தில் மரியாதை செலுத்துவதற்கான முறைகளில் ஒன்று. இவைகளோடு போக்குவரத்து வசதிகள் போதுமான அளவுக்கு இல்லாத அந்த நாட்களில் தான் கேள்விப்பட்ட உண்மைகளை உறுதிசெய்து கொள்வதற்காக வெகுதூரம் பிரயாணப்பட்டு வந்தாள் இந்த ராணி.

அப்படி வந்தவள், நேரில் கேட்டு, கண்டவைகளால் அதிர்ச்சி கொண்டு, ஆச்சரியத்தால் பிரமை கொண்டு, ராஜாவை நோக்கி : உம்முடைய வர்த்தமானங்களையும், உம்முடைய ஞானத்தையும் குறித்து நான் தேசத்தில் கேட்ட செய்தி மெய்யாயிற்று. நான் வந்து அதை என் கண்களால் காணுமட்டும் அந்த வார்த்தைகளை நான் நம்பவில்லை; இவைகளில் பாதியாகிலும் எனக்கு அறிவிக்கப்படவில்லை என்று காண்கிறேன்; நான் கேள்விப்பட்ட பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் உம்முடைய ஞானமும், செல்வமும் அதிகமாயிருக்கிறது (I ராஜா. 10 : 4 – 7) என்றாள்.

இதெல்லாம் சரி, இவள் எப்படி நியாயத்தீர்ப்பின் நாளில், இயேசுவின் காலத்தில் வாழ்ந்த சந்ததியாரைப் பார்த்து குற்றம் சுமத்துவாள்? இந்தக் கேள்வி நமக்குள் எழுகிறது, அப்படித்தானே! இவள் குற்றம் சுமத்துவாள் என்று இயேசு சொல்லும்போது அதில் உண்மை இல்லாமலிருக்குமா? இயேசுவின்

காலத்தில் வாழ்ந்தவர்கள் செய்யத்தவறிய குறைந்தது நான்கு காரியங்களை இவள் தன் வாழ்க்கையில் சாலொமோனினிமித்தம் செய்துள்ள இயேசுவோடு ஒப்பிடும்போது எவ்விதத்திலும் அருகே நிற்க அருகதை அற்ற சாலொமோனுக்காக இவள் இப்படிச் செய்திருக்கும் போது, சாலொமோனிலும் பெரியவரான இயேசுவுக்காகச் செயல்பட அந்தச் சந்ததியார் தவறியிருக்கிறார்கள். ஆம், அந்த ராஜஸ்திரீ செய்ததைப் பாருங்கள். 1. சாலொமோனைப் பற்றிய செய்தி வந்தபோது, எனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்று நினைக்காமல் காது கொடுத்து கேட்டுள்ளாள். 2. கேள்விப்பட்ட காரியங்களின் உண்மைத் தன்மையைக் கண்டறிய முயற்சி எடுத்து வெகுதூரம் பயணித்து வந்தாள். 3. கேள்விப்பட்டவைகள் உண்மைதானா என்று பரிசோதித்துப் பார்த்தாள். 4. உண்மை தான் என்று கண்டபோது அதைப் பகிரங்கமாக அறிக்கை செய்தாள்.

அருமையானவர்களே, இயேவின் காலத்தில் வாழ்ந்தவர்களையும், சொல்லப்போனால் அவர்களைக் காட்டிலும் சிலுவையின் சிலாக்கியங்களை அனுபவிக்கும் பாக்கியம் பெற்ற நம்மையும் அந்த நியாயந்தீர்ப்பின் நாளில் குற்றம்சாட்ட இவை போதாதா? சொல்லுங்கள். இயேசுவின் காலத்தில் வாழ்ந்தவர்களை விட்டுத் தள்ளுங்கள். அவர்களை நாம் இனி ஒன்றும் செய்யமுடியாது. இப்பொழுது உயிரோடிருக்கும் நாம் நம்முடைய நிலையை இங்கே உய்த்துப் பார்ப்போம். நம்மில் எத்தனை பேர் அந்தத் தென் தேசத்து ராணி பெற்றிருந்த குணங்களை நம்முடைய ஆவிக்குரிய வாழ்வில் பெற்றிருக்கிறோம்? நெஞ்சிலே கை வைத்துச் சொல்லுங்கள். ஒருவேளை நாம் பெற்றிருந்தால் நம் பக்தி வாழ்க்கை எங்கேயோ போயிருந்திருக்குமே. இன்னும் முளைத்த குழிக்குள்ளேயே இருக்க வேண்டிய அவசியம் இருக்காதே!

நம்மில் எத்தனை அந்த ராணி போல, சாலொமோனிலும் பெரியவராகிய இயேசுவைப் பற்றிய காரியங்களைக் கேட்கும் ஆர்வம் உள்ளவர்களாக உள்ளோம்? ஒரு 3000 பேரை இரட்சிப்புக்குள் வழிநடத்தின அந்த மகா பிரசங்கத்தைப் பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு செய்த போது, என் வார்த்தைகளுக்குச் செவிகொடுங்கள் என்று சொல்லியே ஆரம்பித்தார். ஆனால் இன்றைய நிலை என்ன? இயேசுவின் காரியங்கள் காது கொடுத்துக் கேட்கப்படுகிறதா? புறவினத்தாராயிருக்கிற நம் தேசத்து மக்கள், இயேசுவைப் பற்றி நாங்கள் எதற்குக் கேட்டு அறிந்து கொள்ள வேண்டும் என்று நினைக்கிறார்கள். தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கிற அநேக ஜனங்கள் இயேசு போதித்த உபதேச காரியங்களுக்கும், (யோவான் 12 : 48; II யோவான் 9) அவர் வாக்களித்துக் கட்டின சபைக்கும் (மத். 16 : 18) நாங்கள் எதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று தங்கள் செயல்களால் சொல்லாமல் சொல்லுகின்றனர். இதையும் மீறி கொஞ்சம் பேர்

செவிமடுத்துக் கேட்டாலும் அப்படியா என்பதோடு நிறுத்திக் கொள்கிறார்களே தவிர, அந்தக் தென் தேசத்து ராணி போல, தேவையான முயற்சிகளில் இறங்குவதில்லை. இவள் பாருங்கள், ஒரு தேசத்து ராணியாக பல பொறுப்புகளோடு இருந்தாலும் அந்நாட்களில் 1200 மைல்கள் வந்து செல்லப் பல நாட்கள் ஆகும் என்றாலும் பகீரதப் பிரயத்தனம் பண்ணி பிரயாணத்தை மேற்கொண்டுள்ளாள். ஆன்மீகக் காரியங்களில் உண்மையை உறுதி செய்துகொள்ள நாம் இப்படிப்பட்ட பிரயாசைகளை எடுக்கிறோமா?

மேலும், கடும் முயற்சி எடுத்ததோடு நிற்காமல், உண்மையைக் கண்டறிவதற்கான முயற்சியிலும் நேரிடையாக இறங்கினாள். விடுகதை களோடு வந்து, கேள்விப்பட்டவைகள் உண்மைதானா என்று பரிசோதித்துப் பார்த்தாள். எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள் (I தெச. 5 : 21) என்னும் பவுலுடைய போதனையின் மேன்மை போதிக்கப்பட்டு 2000 ஆயிரம் ஆண்டுகள் ஆகியும் நமக்குப் புரியாத போது தனக்குப் போதிக்கப்படாத நிலையிலும் உணர்ந்து செயல்பட்டுள்ளாள்.

அன்பானவர்களே, எத்தனை பேராகிய நாம் நமக்குப் பிரசங்கிக்கப்படுகிறவைகளைக் கேட்டு, அவைகளின் உண்மைத் தன்மையை உறுதிசெய்து கொள்ள விருப்பம் உடையவர்களாகவும், அதற்காக நம்மை ஆயத்தப்படுத்தி முயற்சிக்கிறவர்களாகவும் உள்ளோம்? நாம் தப்பு செய்து கொண்டுள்ளோம் என்பது புரிகிறதா? இயேசு கூறியது சரிதானே! நம்மேல் இந்த ராஜஸ்திரீ குற்றம் சுமத்த முகாந்திரம் உண்டுதானே. இன்னும், இவள் சோதித்து உண்மையைக் கண்டறிந்தபோது அதைப் பகிரங்கமாக அறிக்கையும் செய்தாள். இதற்கு அபார மனபலம் வேண்டும். இன்றைக்குக் கிறிஸ்தவ அறநெறி தழைக்காமலும், செழித்து ஓங்காமலும் இருப்பதற்குக் காரணம், கிறிஸ்தவம், இக்குணத்தில் முதுகெலும்பு ஒடிந்து காணப்படுவதுதான். இயேசுவின் காலத்தில் காணப்பட்ட அந்த அவல நிலை இன்றளவும் தொடர்கிறது பாருங்கள். ஆகிலும், அதிகாரிகளிலும் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும் ஜெப ஆலயத்துக்குப் புறம்பாக்கப்படாதபடி, பரிசேயர் நிமித்தம் அதை அறிக்கை பண்ணாதிருந்தார்கள் (யோவான். 12 : 42). நாம் என்ன செய்யப் போகிறோம்? தென்தேசத்து ராணி இயேசுவின் காலத்தில் வாழ்ந்தவர்கள் மீது குற்றம் சுமத்தக் காத்திருப்பது போல், நியாயந்தீர்ப்பு நாளில் நம்மீது குற்றம் சுமத்தாமல் நம்மைக் காத்துக் கொள்ளும் முயற்சிகளில் உடனடியாக இறங்குவோம்.

## II. நினிவே பட்டணத்து மக்கள் குற்றம் சுமத்துதல்

அடுத்ததாக, நியாயத்தீர்ப்பு நாளில் எழுந்து நின்று குற்றம் சுமத்தக்

காத்திருக்கும் நினிவே பட்டணத்து மக்களிடமிருந்து நமக்குப் கிடைக்கும் பாடங்கள் என்னவென்று பார்ப்போம்.

பண்டைய அசீரியாவின் தலை நகரப் பட்டணமாகிய நினிவேயை வேதாகமம் மகா நகரம் என்றழைக்கிறது. கிட்டத்தட்ட 2750 ஆண்டுகளுக்கு முன்பாக இதன் மக்கள் தொகை குறைந்தது 1,20,000 (யோனா. 4 : 11). பொதுவாக, பெருநகரங்கள் என்றால் பாவச் செயல்களுக்குக் குறைவிருக்காது. எல்லாக் காலத்திலும் இது தான் நிலை. நினிவேயும் அதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை. ஆம், அவர்களுடைய அக்கிரமம், சோதோம் கொமாரா பட்டணத்தின் தேவ விரோதச் செயல்கள் போல தேவ சமூகத்தைச் சென்றடைந்தது.

எல்லாக் காலத்திலும் எல்லா மக்களும் காப்பாற்றப்பட வேண்டுமென்று விரும்பும் நம் தேவன், புறவினத்து மக்களைக் கொண்ட இப்பட்டணத்தை உடனடியாக அழிக்க விரும்பாமல், அவர்கள் மனந்திரும்புவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துகிறார். ஆம் அமித்தாயின் குமாரனாகிய யோனாவிடம் கர்த்தர் பேசி, நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய், அதற்கு விரோதமாகப் பிரசங்கி; அவர்களுடைய அக்கிரமம் என் சமூகத்தில் வந்து எட்டினது என்றார் (யோனா 1: 2). இங்கே சில பழுத்த தேவ மனிதர்கள் அவ்வப்பொழுது செய்கிற அதே தவறை யோனாவும் செய்தான். கர்த்தருடைய வார்த்தைகளுக்கு விரோதமாகச் செயல்பட்டான். அப்பொழுது யோனா கர்த்தருடைய சமூகத்தினின்று விலகி, தர்ஷீசுக்கு ஓடிப்போகும்படி எழுந்து, யோப்பாவுக்குப் போய், தர்ஷீசுக்குப் போகிற கப்பலைக் கண்டு, கூலி கொடுத்து, தான் கர்த்தருடைய சமூகத்தினின்று விலகும்படி, அவர்களோடே தர்ஷீசுக்குப் போகக் கப்பல் ஏறினான் (1 : 3). நினிவேயும், தர்ஷீசும் கிட்டத்தட்ட எதிர்எதிர் திசையிலிருந்த பட்டணங்கள். கர்த்தர் இறுதியில் மனமிரங்கி விடுவார் என்று அவருடைய தன்மைகளை அறிந்து வைத்திருந்த யோனாவுக்கு (யோனா. 4 : 2). கர்த்தருடைய சமூகத்திற்கு விலகி எங்கும் சென்றுவிட முடியாது என்ற அறிவு ஏன் இல்லாமல் போனதென்பது புரிந்துகொள்ள முடியாத ஒன்றாகவே உள்ளது. தேர்ந்த பக்திமான்கள் பாதை தடுமாறுவது பரிதாபத்திற்குரிய ஒன்றாகவே இருக்கிறது.

பிறகு எப்படியோ கர்த்தருடைய கிடுக்கிப் பிடிக்கு டிமிக்கி கொடுக்க முடியாமல், கர்த்தரின் கட்டளைப்படி, மூன்று நாள் பிரயாண விஸ்தாரணம் கொண்ட மகா நகரமாகிய நினிவேக்குள் பிரவேசித்து ஒரு நாள் பிரயாணம் பண்ணி : இன்னும் நாற்பது நாள் உண்டு, அப்பொழுது நினிவே கவிழ்க்கப்படும்போம் என்று கூறினான். கர்த்தர் பிரசங்கி என்று சொன்னதற்கு மாறாக, இவன் வெறுமனே கூறியுள்ளான். கடனைக் கட்டும் வேலையையே செய்துள்ளான். அப்பொழுது நினிவேயிலுள்ள ஜனங்கள் தேவனை

விசுவாசித்து, உபவாசம் செய்யும்படி கூறினார்கள்; பெரியோர் முதல் சிறியோர் மட்டும் இரட்டுடுத்திக் கொண்டார்கள் ( 3 : 5 ). தொடர்ந்து கவனித்தால், நினிவேயின் ராஜா முதற்கொண்டு சகலபேரும் இரட்டுடுத்திக் தங்களைத் தாழ்த்தினதோடு மிருக ஜீவன்களையும், ஆடுமாடுகளையும் பசி, தாகத்துக்குள்ளாக்கினார்கள். அவர்கள் செய்த செயல்களெல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக இருப்பது, தேவனை நோக்கி உரத்த சத்தமாய்க் கூப்பிட்டதும் அவரவர் தம் தம் பொல்லாத வழியையும், தம் தம் கைகளிலுள்ள கொடுமையையும் விட்டுத் திரும்பும் நடவடிக்கையையும் மேற்கொண்டதே ( யோனா 3 : 8 ). நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தைத் தேவன் புறக்கணிக்கமாட்டார் ( சங். 51 : 17 ) என்பதைப் புரிந்தவர்களாக இந்தப் புறவினத்து மக்கள் செயல்பட்டது ஆச்சரியமாக உள்ளது!

யாராக இருந்தாலும் பரலோகத்தின் தேவன் எல்லோரிடமும் எதிர்பார்ப்பது இது தான். தேவனின் இப்பண்பைப் புரிந்து கொள்ளமுடியாதவர்கள் அழிந்து போகிறார்கள். நினிவே பட்டணத்தார், யோனாவுக்கு இரண்டு நாள் பிரயாணத்தை மிச்சப்படுத்திக் கொடுத்து ஒரே நாளில் மனந்திரும்பி, தேவன் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாமல் பார்த்துக் கொண்டனர் (யோனா 3 : 10). இந்த நினிவே பட்டணத்தார் தான், நியாயத்தீர்ப்பின் நாளில் இயேசுவின் காலத்தில் வாழ்ந்த மனந்திரும்பாதவர்கள் மீது குற்றம் சுமத்துவார்கள் என்று சொல்லியிருக்கிறார். குற்றம் சுமத்தாமல் வேறென்ன செய்ய முடியும்? ஒரே ஒரு நாள் மட்டும் யோனா கூறிய வார்த்தைகளைக் கேட்டு, ஒட்டுமொத்த நகரமும் உடனடியாக மனந்திரும்புவதற்குக் காட்டிய தீவிரத்தோடு, இயேசுவின் காலத்தில் 3½ ஆண்டுகள் கூவிக்கூவி அவர் செய்த பிரசங்கித்தைக் கொச்சைப்படுத்தி, உதாசீனம் செய்து, எதிர்த்து நின்றதை ஒப்பிட்டுப் பார்த்தால், யோனாவுக்கு வந்த கோபத்தை விட ( 4 : 1) அதிகமான கோபம் தான் வரும். குற்றம் சாட்டாமல் எப்படி வாளாயிருக்க முடியும்? வேண்டா வெறுப்போடு ஒப்புக்கு நாலு வார்த்தைகள் கூறின யோனாவுக்கே நாங்கள் இவ்வளவு மரியாதை கொடுத்தோமே, உங்களால் எப்படித் தேவ குமாரனாகிய இயேசுவை, யோனாவிலும் எல்லாவகையிலும் பெரியவராகிய இயேசுவை இவ்வளவு கீழ்த்தரமாக நினைத்து, அவருடைய பிரசங்கத்தை அலட்சியம் செய்ய முடிந்ததென்று கேட்காமலா இருப்பார்கள்.

எனக்கன்பானவர்களே! ஏதோ, அவர்கள்தான் வசமாக மாட்டிக் கொண்டார்கள் என்று எண்ண வேண்டாம். நாமும் இயேசுவின் உபதேசப்படி மனந்திரும்பாமல் போனால் அவர்களைக் காட்டிலும் எக்கச்சக்கமாகச் சிக்கிக் கொள்ளுவோம். எப்படியெனில், பக்திக் காரியங்களில் இயேசுவின் காலத்தில்

வாழ்ந்தவர்களை விட நாம் பெரும் பாக்கியம் பெற்றவர்கள். இயேசு வாழ்ந்த காலத்தில் அவர்களுக்காக இயேசு சிலுவையயில் அறையப்படவில்லை. அவர்களுக்காக இயேசு இரத்தம் சிந்தவில்லை. அப்பொழுது இயேசுவின் இரத்தம் விலையாகக் கொடுக்கப்பட்டு சபையானது கட்டப்படவில்லை. (அப். 20 : 28 ). பரிசுத்த ஆவியானவராகிய தேற்றரவாளன் அனுப்பப்படவில்லை (யோவான் 14 : 26). ராஜ்யமாகிய சபைக்குள்ளாக வரும் இரட்சிப்பின் வழி அறிவிக்கப்படவில்லை (அப். 2 : 38) உண்மை நிலை புரிகிறதா?

இப்படி இயேசுவின் காலத்தில் வாழ்ந்தவர்களைக் காட்டிலும் நாம் சிலாக்கியமும், பாக்கியமும் உள்ளவர்களாக இருக்கும்போது, மனமாற்றத்தை நம் வாழ்வில் வெளிப்படுத்தாமல் இருப்போமானால் ( அப். 17 : 30 ) மகா நாளின் குற்றச்சாட்டிலிருந்து தப்பித்துவிட முடியுமா ? சிந்திப்போம். முடியாது, முடியவே முடியாது. நியாயத்தீர்ப்பின் நாளில். மறுபடியும் மனந்திரும்புவதற்கு எவ்வித வாய்ப்பும் இல்லாத நாள் அந்த நாள். முதல் குற்றச்சாட்டாகிலும் தென் தேசத்து ராணியாகிய அந்த ஒரே ஒரு பெண்ணிடமிருந்து. ஆனால், இரண்டாம் இந்தக் குற்றச்சாட்டு இருக்கிறதே, இது கிட்டத்தட்ட 1.2 லட்சம் பேரிடமிருந்து. யாரெல்லாம் எப்படிக் கேட்பார்களோ, நினைத்தாலே பயமாக இருக்கிறது. ஏனெனில், யோனா ஒரு பிரசங்கம் கூடச் செய்யாத ஒரு பிரசங்கி. ஆனால், இயேசு? யோனா ஓர் அற்புதம் கூட செய்யாத ஒரு தீர்க்கன். ஆனால், இயேசு? யோனா அமித்தாயின் குமாரன், ஆனால் இயேசு? எப்படித் தப்பிக்க முடியம்? சொல்லுங்கள். மனந்திரும்புவதைத் தவிர வேறு வழியே இல்லை.

அப்படியானால், என்ன செய்யப் போகிறோம்? வோறான்றும் வேண்டாம், பேசாமல், கிறிஸ்துவின் உபதேசப்படி மனந்திரும்பி, கிறிஸ்து கட்டின சபையில் அங்கமாவோம்! ஆமென்!! ●


## வேதாகம கருத்தரங்கு

Bible Seminar

நாள் : 22 - 24, செப்டம்பர் 2015
(22 மதியம் முதல் 24 மதியம் வரை)

இடம் : ஏற்காடு மலை

பொருள் : 1. சபையில் மூப்பர்களுக்கான தேவை
2. மூப்பர்களுக்கான தகுதிகள்
3. மூப்பர்களை ஏற்படுத்துதல்

ஆசிரியர் : சகோ. ஜெர்ரி பேட்ஸ்
Bro. Jerry Bates

பெண்களுக்கான சிறப்பு வகுப்பு

போதிப்பவர் : சகோதரி. பவுலா பேட்ஸ்
Sis. Paula Bates

# ஏன் அஸ்திபாரம் மிக முக்கியமானதாக இருக்கிறது?

J.C. சோட்

நாம் எல்லோரும் அறிந்திருக்கிறபடி, இவ்வுலகத்தில் ஒரு வீட்டையோ அல்லது அடுக்குமாடி வீடுகளையோ அல்லது நீண்ட நாட்கள் நிலைத்திருக்க வேண்டுமென்று நாம் எதிர்பார்க்கும் ஏதாவது ஒன்றையோ கட்டுவதற்கு சரியான அஸ்திபாரம் மிகவும் அவசியமானதாக இருக்கிறது. நாம் நம்முடைய வேலையிலோ அல்லது ஒரு தொழிலிலோ வெற்றி பெற வேண்டுமென்றால், அதற்காக போதுமான கல்வி மற்றும் பயிற்சி பெற்று நம்மை ஆயத்த மாக்கி வைத்திருக்க வேண்டுவது அவசியம் என்ற உண்மையை நாம் அறிந்திருக்கிறோம். நாம் இந்த அஸ்திபாரத்தின் முக்கியத்து வத்தையோ அல்லது எதிர்காலத்திற்கு ஆயத்தப்படுவதையோ அசட்டை செய்தால், நாம் மோசமான காலத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம் என்று பொருள்படும்.

நம்முடைய கர்த்தர் ஒரு நல்ல ஆவிக்குரிய அஸ்திபாரத்திற் கான அவசியத்தை இரண்டு வகையான கட்டிடம் கட்டுபவர்களை உதாரணமாகச் சொல்லி விளக்கியுள்ளார். ஒருவன் கன்மலையின் மேல் வீட்டைக் கட்டினவன். இன்னொருவன் மணலின் மேல் வீட்டைக் கட்டினவன். இவர்களைப் பற்றி இயேசு என்ன சொன் னார் என்பதை கவனியுங்கள். ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின் மேல் மோதியும், அது விழவில்லை. ஏனென்றால், அது கன்மலையின் மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின் மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின் மேல் மோதின போது அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார் (மத்தேயு 7:24-27).

சற்று முன்பு நாம் பார்த்த உதாரணத்தில், இயேசு அந்தக் கட்டி டம் கட்டுபவர்களில் யார் புத்தியுள்ளவன், யார் புத்தியற்றவன் என்று வேறுபடுத்திக் காட்டியிருக்கிறார். கிறிஸ்துவின் வார்த்தைகளைக் கேட்டு அதன்படி கட்டுகிறவன் புத்தியுள்ளவன் என்று காட்டுகிறார். அவன் கிறிஸ்துவின் மீது கட்டுகிறபடியால்

புத்தியுள்ள மனிதன் என்று சொல்கிறார். இந்த மனிதன் பழக்க வழக்கங்களையும், பாரம்பரியத்தையும், மனுஷருடைய போதனைகளையும் குழிதோண்டிப் புதைத்து விட்டு, கிறிஸ்துவின் போதனைகளின் மீது தன் வீட்டைக் காட்டுகிறான். அதன் விளைவாக, இந்த மனுஷன் உறுதியான அஸ்திபாரத்தில் இருக்கிறான். இவனிடம் சத்தியம் இருக்கிறது, இவனிடம் கிறிஸ்து இருக்கிறார். இவன் ஒரு கிறிஸ்தவன். இவன் கர்த்தருடைய சபையின் உறுப்பினர். இந்த மனுஷனை எதுவும் அசைக்க முடியாது. இவன் பற்றிக் கொள்ளும் படியான ஒன்று இருக்கிறது. இவனுக்கு நித்திய ஜீவனுக்கான நம்பிக்கை உண்டு.

இயேசு பேசுகிற மற்றொரு மனிதன் புத்தியற்றவன். இவனும் கிறிஸ்துவின் வார்த்தைகளைக் கேட்கிறான். ஆனால், அவை களுக்கு கீழ்ப்படியத் தவறுகிறான். ஒருவேளை அவைகளை அவன் நம்பாமல் இருந்திருக்கலாம். இன்னும் காலம் இருக்கிறது என்று நினைத்திருக்கலாம். அவன் தன்னை நல்லவன் என காரணம் காட்டியிருக்கலாம். அல்லது மனுஷருடைய உபதேசங்களுக்கு பின்னாகச் சென்றிருக்கலாம். பிரச்சினை என்னவாக இருந்தாலும் அவன் கர்த்தருக்குக் கீழ்ப்படியத் தவறிவிட்டது உண்மையாயிருக் கிறபடியால், அவன் கடைசியாக எதன்மீது கட்டுகிறானோ அது அவனுக்கு நன்மையாக இருக்காது. அவன் இழந்து போன நிலையில் இருக்கிறான், நித்திய காலத்திற்கும் இழந்து போவான்.

அநேக வருடங்களுக்கு முன்பு ஏசாயா தீர்க்கதரிசி, கர்த்தர் அஸ்திபாரமாகிய ஒரு கல்லை சீயோனிலே வைப்பது குறித்துப் பேசியிருக்கிறார். அந்த அஸ்திபாரம் கிறிஸ்து தான். அது எருசலேமில் வைக்கப்படும். அப்போது ஏசாயா உரைத்த அந்த தீர்க்கதரிசனத்தை நாம் வாசிப்போம். ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது; இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன். அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும் திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக் கல்லாயிருக்கும், விசுவாசிக்கிறவன் பதறான் என்று கூறியுள்ளார் (ஏசாயா 28:16). இந்த அஸ்திபாரத்தின் விவரிப்பைக் கவனியுங்கள். அது ஒரு கல்லாயிருக்கும், அது பரீட்சிக்கப்பட்ட ஒன்றாயிருக்கும், அது விலையேறப் பெற்றதாயிருக்கும், அது திட அஸ்திபாரமுள்ள மூலைக்கல்லாயிருக்கும். இந்த விவரிப்பு, பதங்கள் எல்லாம் இயேசு கிறிஸ்துவைக் குறிப்பதை புதிய ஏற்பாட்டில் நாம் பின்னர் பார்க்கலாம். சங்கீதக்காரனாகிய தாவீதும் இந்த அஸ்திபாரம் பற்றி சங்கீதம் 118:22,23 வசனங்களில் சுட்டிக்காட்டியிருக்கிறார், வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக் கல்லாயிற்று. அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்க ளுக்கு ஆச்சரியமாயிருக்கிறது புதிய ஏற்பாட்டில் இது கிறிஸ்துவில் நிறைவேறியதை நாம் காண முடியும்.

**இயேசுவின் நாட்களுக்கு நாம் திரும்பும்போது, இப்படி வாசிக்கிறோம்.** இயேசு அவர்களை நோக்கி; வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று, அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயி ருக்கிறது என்று வேதத்தில் ஒருக்காலும் வாசிக்கவில்லையா? **(மத்தேயு 21:42). இயேசு இவ்விதமாகச் சொன்னார்,** வீடு கட்டுகிற வர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லா யிற்று என்று எழுதியிருக்கிற வேதவாக்கியத்தின் கருத்தென்ன? அந்தக் கல்லின் மேல் விழுகிறவன் எவனோ அவன் நொறுங்கிப் போவான், அது எவன் மேல் விழுமோ அவனை நசுக்கிப்போடும் என்றார். **ஒரு கல் அல்லது பாறை அஸ்திபாரம் போடுவதற்காக பயன்படுத்தப்படும், ஆனால், ஒருவர் அதன்மீது இடறி விழுந்தா லோ அல்லது அது அவன்மீது விழுந்தாலோ அந்தக்கல் அந்த நபரை அழித்து விடும். வேறுவிதமாகச் சொன்னால், சரியாக பயன்படுத்தி னால் அது ஆசீர்வாதமாக இருக்கும்; ஆனால், அது அசட்டை பண்ணப்பட்டால் அல்லது தவறாக பயன்படுத்தப்பட்டால் அது அழிக்கும் சக்தியாக மாறிவிடும். இது ஆவிக்குரிய கன்மலையா யிருக்கிற கிறிஸ்துவின் காரியத்தில் உண்மையா இருக்கிறது.**

**அப்போஸ்தலருடைய புத்தகத்திற்குத் திரும்பும் போது, பேதுரு, குணமாக்கப்பட்ட ஒரு மனிதனை பற்றிப் பிரதான ஆசாரி யர்கள் மற்றும் வேதபாரகரிடம் இப்படிச் சொன்னார்.** உங்களால் சிலுவையில் அறையப் பட்டவரும், தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசு கிறிஸ்து வின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்த மா நிற்கிறானென்று உங்களெல்லாருக்கும், இஸ்ரவேல் ஜனங்க ளெல்லாருக்கும் தெரிந்திருக்கக்கடவது. வீடுகட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமா எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக் கல்லானவர். அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான் **(அப்போஸ்தலர் 4:10-12). பவுல் இஸ்ரவேலர்கள் அல்லது யூதர்களைப் பற்றி இப்படிச் சொல்கிறார்.** நீதிப்பிரமாணத்தைத் தேடின இஸ்ரவேலரோ நீதிப்பிரமாணத்தை அடையவில்லை, என்னத்தினாலென்றால், அவர்கள் விசுவாசத்தினாலே அதைத் தேடாமல், நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலே தேடினபடியால் அதை அடைய வில்லை; இடறுதற்கான கல்லில் இடறினார்கள். இதோ, இடறுதற்கான கல்லையும், தவறுதற்கான கன்மலையையும், சீயோனில் வைக்கிறேன்; அவரிடத்தில் விசுவாசமாயிருப்பவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை என்று எழுதியிருக்கிறபடியாயிற்று **(ரோமர் 9:31-33). இங்கே பவுல் ஏசாயா 28:16ஐ மேற்கோள் காட்டித்தான் பேசுகிறார்.**

**இங்கே, இந்தக் கன்மலை அல்லது அஸ்திபாரம் யார்?** போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது **(I கொரிந்தியர் 3:11). இன்னும் ஐ கொரிந்தியர் 10:3,4 வசனங்களில், மோசேயின் நாட்களில் இஸ்ரவேலர்கள் பற்றி பவுல் இப்படிச் சொல்கிறார்,** எல்லாரும் ஒரே ஞானபோஜனத்தைப் புசித்தார்கள், எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில், அவர்களோடே கூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள். அந்தக் கன்மலை கிறிஸ்துவே என்று. **அதைப் போலவே, எபேசு கிறிஸ்தவர்களிடம் பேசும்போது,** ஆகையால் இனி நீங்கள் அந்நியரும், பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்க ளோடே ஒரே நகரத்தாரும், தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப் பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக் கல்லாயிருக்கிறார்; அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவா இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர் மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள் **(எபேசியர் 2:19-22) என்று கூறியுள்ளார். இங்கே அப்போஸ்தலனாகிய பவுல், தேவனுடைய வீட்டார் அல்லது தேவனுடைய குடும்பமாயி ருக்கிற கிறிஸ்தவர்கள் பற்றி பேசிக் கொண்டிருக்கிறார். இங்கே தேவனுடைய வீட்டார் அல்லது சபையார் எப்படி அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் உபதேசங்களின் மீது கட்டப்பட்டிருக் கிறார்கள் என்பதையும், அதற்கு கிறிஸ்து மூலைக் கல்லாயிருக் கிறார் என்பதையும் விளக்குகிறார். இங்கே பொதுவான அஸ்திபாரம் மாத்திரம் முக்கியமானதாயிராமல், மூலைக்கல்லும் முக்கியமானதாக உள்ளது. அஸ்திபாரத்தின் மிக முக்கியமான பகுதி இந்த மூலைக்கல்தான். அஸ்திபாரமில்லாமல் எந்த ஒரு வீடும் நிலை நிற்காது. மறுபடியும் பவுல் சொல்லும் போது,** தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீஅறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனு டைய சபையாய் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது **(ஐதீமோத்தேயு 3:15). கிறிஸ்து அஸ்திபாரமாகவும், மூலைக் கல்லாகவும் இருந்து தேவனுடைய வீடு அல்லது சபை அதன்மீது கட்டப்படும் போது, சபை சத்தியத்துக்குத் தூணும், ஆதாரமுமாயி ருக்கிறது. அதாவது, சபை உறுதியான அஸ்திபாரத்தின் மீது கட்டப் பட்டிருக்கிறபடியால், சபை சத்தியத்தை பிடித்துக் கொள்ளும் நிலையிலும், இழந்துபோன உலகத்திற்கு சத்தியத்தை பிரசங்கிக் கும் நிலையிலும் இருக்கிறது.**

**அப்போஸ்தலனாகிய பேதுரு தன்னுடைய நாட்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்களிடம்,** இப்படியிருக்க, கர்த்தர் தயையுள்ள வரென்பதை நீங்கள் ருசிபார்த்ததுண்டானால், சகல துர்க்குணத் தையும், வஞ்சகங்களையும்,

பொறாமைகளையும், சகலவித புறங் கூறுதலையும் ஒழித்துவிட்டு, நீங்கள் வளரும்படி புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப் பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள். மனுஷரால் தள்ளப்பட்ட தாயினும், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டதும் விலையேறப் பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்த வர்களாகிய நீங்களும் ஜீவனுள்ள கற்களைப் போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசு கிறிஸ்து மூலமாத் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள், அந்தப் படியே; இதோ தெரிந்து கொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றது மாயிருக்கிற மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன்; அதன் மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லை என்று வேதத்திலே சொல்லியிருக்கிறது. ஆகையால், விசுவாசிக்கிற உங்களுக்கு அது விலையேறப்பெற்றது; கீழ்ப்படியாமலிருக்கிறவர்களுக்கோ வீட்டைக் கட்டுகிறவர்களால் தள்ளப்பட்ட பிரதான மூலைக்கல்லாகிய அந்தக்கல் இடறு தற்கேதுவான கல்லும் விழுதற் கேதுவான கன்மலையுமாயிற்று; அவர்கள் திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்து இடறுகிறார்கள்; அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள் (I பேதுரு 2:1-8).

**மறுபடியுமாக, இங்கே இந்த எழுத்தாளர் எப்படி கிறிஸ்து, ஏசாயா 28:16 தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாயிருக்கிறார் என்பதையும், கிறிஸ்து பிரதான மூலைக்கல்லாயிருக்கிறார் என்பதையும் குறிப்பிடுகிறார். யூதர்கள் தள்ளின அந்தக்கல் அஸ்தி பாரமாக மாறினதோடு, அஸ்திபாரத்தின் மிக முக்கியமான பகுதி யாகிய பிரதான மூலைக்கல்லாகவும் மாறிவிட்டது. இங்கே, பேதுரு கிறிஸ்துவை ஒருவன் ஏற்றுக் கொள்ளும் போது எப்படி அவன் ஆசீர்வாதமுள்ளவனாகவும், அவரை ஏற்றுக்கொள்ளாமல் தள்ளும் போது எப்படி இழந்து போனவர்களாகவும் இருப்பார்கள் என்று காட்டுகிறார்.**

**மத்தேயு 16:13-19 வசனங்களில், கிறிஸ்து அப்போஸ்தலர் களிடம் இந்த உலகம் தன்னைப் பற்றி என்ன நினைக்கிறது என்று கேட்டார். அப்போது அப்போஸ்தலர்கள், உம்மை சிலர் ஒரு தீர்க்கதரிசி என்றும், சிலர் உம்மை வேறொரு தீர்க்கதரிசி என்றும் நினைக்கிறார்கள் என்று பதிலளித்தார்கள். ஆனால், அப்படிப்பட்ட பதிலை அங்கே கிறிஸ்து எதிர்பார்க்கவில்லை. தம்மீது அவர்கள் கொண்டிருந்த இப்படிப்பட்ட விசுவாசத்தின் மீது, இயேசுவால் தம்முடைய சபையை கட்டவில்லை. பின்பு, இயேசு அப்போஸ்த லர்களிடம் திரும்பி, அவர்கள் தன்னைப்பற்றி என்ன நினைக்கிறார் கள் என்று கேட்டார். அப்பொழுது அவர்கள், இயேசுவை தேவனு டைய குமாரன் என்று விசுவாசிப்பதாகச் சொன்னார்கள். அங்கே, தன்னை தேவனுடைய குமாரன் என்று அவர்கள் செத அறிக்கை யின் மீது தம்முடைய சபையைக் கட்டுவதாகக்**

கர்த்தர் பதிலளித்தார். அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார் கள். அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தார்கள். கர்த்தர் அவர்களை இரட்சித்துத் தம்முடைய சபையிலே சேர்த்துக்கொண்டார். ஆனால், சபையை அவர் எதன் மீது கட்டினார்? தான் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்கின்ற உண்மையின் மீது இயேசு தம்முடைய சபையைக் கட்டினார். அதுமாத்திரமல்ல, சபை இந்நாள்வரை இந்த உண்மையின் மீதுதான் இருக்கிறது. கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று நிரூபிக்கப்படா திருந்தால் சபை விழுந்துபோயிருக்கும் அல்லது எப்பொழுதோ இல்லாமல் போயிருக்கும். ஆனால், சபை இன்னும் நிலைத்திருக்கிறது, கிறிஸ்து தேவனுடைய குமாரன், கன்மலை, பிரதான மூலைக்கல் என்கின்ற உண்மைகளை அடிப்படையாக வைத்துத் தான் சபை இன்னும் நிலைத்திருக்கிறது. பவுல் சொன்னது போல், அவர் ஓர் உறுதியான அஸ்திபாரம் தான்.

என் நண்பர்களே, எதன் மீது நீங்கள் கட்டிக் கொண்டிருக் கிறீர்கள்? அவர் சொல்லிய வார்த்தையைக் கேட்டு அவைகளின் படி செய்தால் நீங்கள் கிறிஸ்துவின் மீது கட்ட முடியும். நீங்கள் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந் திரும்பி, கிறிஸ்துவில் உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றால், கர்த்தர் உங்களை இரட்சித்து, கிறிஸ்துவின் மீது கட்டப்பட்ட தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்வார். நீங்கள் ஒரு புத்தியுள்ள நபராக இருந்தால் இதைச் செய்வீர்கள். நீங்கள் அப்படிச் செய்ய நாங்கள் ஜெபிக்கிறோம். ●

## நாளும் நடப்பும்

1. மக்களின் ஜனாதிபதி அப்துல் கலாம் மாரடைப்பால் மரணம்.
2. தமிழகத்தில் பூரண மதுவிலக்கை அமல்படுத்தக்கோரி தொடர் போராட்டங்கள்.
3. மேக்கேதாட்டு அணையை கட்டியேத்தீருவோம்.
4. காவிரி டெல்டா பாசனத்திற்காக மேட்டூர் அணைத் திறப்பு.
5. கோவை சீர்மிகு நகரம் உருவாக்கம் குறித்து மக்கள் கருத்து தெரிவிக்கலாம்.
6. அவுஸ் கிரிக்கெட் தொடரை இங்கிலாந்து கைப்பற்றியது.

பெண்கள் பகுதி

# இயேசுவை ஏற்றுக் கொள்ளுதல்

*RACHEAL NAYAGAM*

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளே! கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். சுகமாயிருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

சரி, மேற்கண்ட தலைப்பின் கீழாக வேத வசனங்களின் துணையோடு சில பாடங்களை நாம் கற்றுக் கொள்வோம்.

அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார். அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ,அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். (யோவான் 1 : 11 – 12).

ஒவ்வொருவரும் இயேசுவைப் பற்றிய தீர்மானத்தை கட்டாயம் எடுக்க வேண்டும், ஏற்றுக் கொள்ளுதல் என்பதில் அடங்கியுள்ள பொருளை இவ்வுலகிற்கு காட்ட வேண்டும். மத். 16 : 18 ல் உள்ளபடி இயேசுவை ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏதேன் தோட்டத்திலிருந்து மனுக்குலத்திற்கு மேசியா என்று வாக்குரைக்கப்பட்டவர் இயேசு. பழைய பிரமாணத்திலே 300 க்கும் மேற்பட்ட தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றியவர் இயேசு. ...... இயேசுவைப்பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது என்றான் (வெளி 19 : 10).

ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்பதால் இயேசு தேவனாயிருக்கிறார். ஆம் இயேசு தெய்வீகமானவர். அவர் வார்த்தையாயிருந்தார். அந்த வார்த்தை தேவனாயிருந்தது (யோவான் 1 : 1). அவர் இருக்கிறவராகவே இருக்கிறார். (யோவான் 8 : 58). அவர் நமது மகா தேவனும் நமது இரட்சகருமாயிருக்கிறார் (தீத்து 2 : 13 ). அவரைப் பற்றியதான இந்த உண்மைகளை நம்பாவிட்டால் ஒருவரும் இயேசுவை ஏற்றுக் கொள்ளமுடியாது.

II. இயேசுவை நம் வாழ்க்கையில் ஆண்டவராக ஏற்றுக் கொள்ளவேண்டும். ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த

இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான் (அப். 2 : 36). நம் வாழ்வில் இயேசு ஆண்டவராக இருந்தால் நாம் அடிமைகள் தான். அப்போஸ்தலர்கள் பொதுவாக தங்களை தேவனுடைய ஊழியங்காரர்கள் என்றே அழைத்துக் கொண்டனர் ( ரோமர் 1 : 1 ). நாம் இயேசுவின் அடிமைகளானால் நமக்கு எந்த உரிமையும் இல்லை. இயேசுவுக்கே தங்களை முற்றிலும் ஒப்புக்கொடுத்துவிட்டார்கள். அவருடைய சித்தமே நம்முடைய சட்டம். தொடர்ந்து நம்மை நாமே வெறுக்க வேண்டும் ( மத். 16 : 24). அநேகர் இயேசுவை தேவனுடைய குமாரனென்னு விசுவாசிப்பார்கள். ஆனால் ஒருபோதும் அவரை ஆண்டவராக தங்கள் வாழ்க்கையில் உறுதி செய்து கொள்ளமாட்டார்கள்.

III. இயேசுவை வேத வசனங்கள் கூறுகிற உண்மையின்படி ஏற்றுக் கொள்ள வேண்டும். பாவம், குற்றம், மீறுதல்கள் இவைகளிலிருந்து நம்மை விடுதலையாக்குவது சத்தியம் தான் (யோவான் 8 : 32). தொழுது கொள்ளுகிற காரியத்திலும் தேவன் அங்கீகரிக்கக்கூடிய விதத்தில் அதாவது ஆவியோடும், உண்மையோடும் அவரை தொழுது கொள்ள வேண்டும் (யோவான் 4 : 24). பரலோகத்திற்கடுத்த காரியங்களை போதிப்பது சத்தியம்மட்டும்தான். சத்தியத்தி னாலே அவர்களை பரிசுத்தமாக்கும் உம்முடைய வசனமே சத்தியம் (யோவான் 17 : 17 ). வேதாகமம் சொல்கிறபடி இல்லாமல் வேறு வழியில் ஏற்றுக் கொள்ளுவது எந்த ஒரு அர்த்தமும் இல்லாத செயலாக இருக்கிறது. ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதிய ஆசிரியர்கள், பாவிகள் இயேசுவை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றால் அவர்கள் விசுவாசித்து, மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறுவதின்மூலம்தான் என்று போதித்திருக்கிறார்கள் (அப். 16 : 31; 2 : 38). ஆகையால் இன்றைக்கும் இயேசுவை ஏற்றுக் கொள்ள அதுதான் அதுமட்டும்தான் வழி.

IV. பாவஞ்செய்தவர்கள் இயேசுவை அன்பினிமித்தம் ஏற்றுக் கொள்ள வேண்டும். தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்பு கூற வேண்டும் என்று கட்டளை பெற்றிருக்கிறோம் ( மாற். 12 : 30 ). உண்மையாலுமே தேவனுடைய ஒரே குமாரன் மேல் அவ்வளவு அன்பு வைக்க வேண்டியது மிகவும் அவசியம். குமாரனைக் கனம்பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம்பண்ணாதவனாயிருக்கிறான் (யோவான் 5 : 23) பக்தியான வார்த்தை, மேடைப் பேச்சு இவைகளைக் காட்டிலும் இப்பேர்ப்பட்ட அன்பு மேலானது. இந்த அன்பை விசுவாசத்துடன் கூடிய கீழ்ப்படிதல் மூலம்

செயல்படுத்தலாம். நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக் கொள்ளுங்கள் (யோவான் 14 : 15). இயேசுவின் மேல் அன்பு என்றாலே விசுவாசத்துடன் கூடிய கீழ்ப்படிதல் தான் முக்கியமாக இருக்கிறது. எபிரேய ஆசிரியர் இதைப்பற்றி விளக்கும்போது தாம் பூரணரான பின்பு தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணமாகி ( 5 : 9 ) என்கிறார். இன்றைக்கு மத உலகிலே பார்த்தால் என் இதயத்தை திறந்து இயேசுவை என் உள்ளத்தில் ஏற்றுக் கொண்டேன் என்கிறார்கள். இது அப்படியே தேவன் வெளிப்படுத்தியுள்ள உண்மைக்கு அந்நியமாக காணப்படுகிறது. வெறும் விசுவாசத்தினாலே மாத்திரம் ( யாக். 2 : 20 - 26 ) எவரும் இயேசுவை ஏற்றுக் கொள்ள முடியாது. அவ்வாறு ஒருவன் இரட்சிக்கப்படாமல் இயேசுவை ஏற்றுக் கொள்ளலாம் என்று போதித்தாலோ, செய்தாலோ அது தவறானது, வீணானது.

V. இயேசு வாழ்நாட்காலம் முழுவதும் நம்மால் ஏற்றுக் கொள்ளப்படவேண்டும். மரண பரியந்தம் உண்மையாயிருந்தால்தான் ஜீவ கிரீடத்தை பெற்றுக் கொள்ள முடியும் (வெளி. 2 : 10). பகுதிநேர சீஷனாயிருப்பது சீஷியாயிருப்பது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இதிலிருந்து ஓய்வு பெறும் வயது என்று ஒன்று இல்லை. முடிவு பரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப் படுவான் (மாற்கு 13 : 13 ). ஏதோ சிறிது காலத்திற்கு இயேசுவை ஏற்றுக் கொள்வது ஏற்றுக் கொள்ளாமல் இருப்பதை விட மோசமானது (II பேதுரு 2 : 20 - 22 ). எபிரேய எழுத்தாளர் மிக அழகாக ஏனெனில், ஒரு தரம் பிரகாசிக்கப்பட்டும், பரம ஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியை பெற்றும், தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும் மறுதலித்துப் போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம் (எபி. 6 : 4 - 6). இயேசுவை ஆண்டவராக ஏற்றுக் கொண்டபிறகு ஒருபோதும் பழைய வாழ்க்கையை திரும்பியே பார்க்க கூடாது (லூக்கா 9 : 62). அவ்வாறு செய்கிறவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு தகுதியானவர்களேயல்ல.


அருமையானவர்களே இயேசுவை ஏற்றுக் கொள்வது பற்றி பார்த்த நம்முன் நிற்கும் ஓரே கேள்வி, நீ இயேசுவை இவ்வாறு ஏற்றுக் கொண்டிருக்கிறாயா? என்பதுதான். இதில் மிக முக்கியமானது வேதம் சொல்கிறபடி ஏற்றுக் கொள்ளுதல். பதில் நாம் தான் சொல்ல வேண்டும். தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவோம். ஆமென்.

●

வாலிபர் பகுதி

# முதன்மையானவைகளுக்கு முட்டுக்கட்டைகள்

*Bro. Benny Martin*



**பி**ரியமான வாலிபக்கண்மணிகளே! உங்கள் யாவருக்கும் நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நல்நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் யாவரையும் இக்கட்டுரையின் வாயிலாக மறுபடியும் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். பல நேரங்களில் நாம் கிறிஸ்துவுக்காக அதைச் செய்ய வேண்டும், இதைச் செய்ய வேண்டும் என்று உற்சாக மிகுதியால் உரக்கச் சொல்கிறோம். ஆனால், சில மணிநேரங் களிலேயே அவ்வார்த்தைகள் காற்றில் கரைந்து போகின்றன. உலகக் கவலைகள், குடும்ப அழுத்தங்கள் மற்றும் பல பொருளாதாரப் பிரச்சனைகள் நம் உற்சாகத்தை நிலைகுலையச் செய்துவிடுகின்றன. ஆனால் இச்சாக்கு போக்குகளைத் தேவன் ஏற்றுக்கொள்வாரா? இல்லை, நிச்சயமாகவே ஏற்றுக்கொள்ளமாட்டார். பல வாலிபர்கள் சினிமா, விளையாட்டு போன்ற காரியங்களில் உத்சவ உத்வேகத்துடன் ஈடுபடுகிறார்கள். ஆனால், ஆவிக்குரிய காரியங்கள் என்று வரும்போது உற்சாகமற்றுக்காணப்படுவதை நம்மால் காண முடிகிறது. தேவனுக்காக நாம் செய்ய வேண்டிய காரியங்களை உற்சாகமாகச் செய்யவிடாமல் தடுக்கும் காரணிகளை நாம் இனி அலசி ஆராய்வோம்.

## I. தேவன் நம்மோடு இருக்கிறார் என்பதை மறந்துவிடும்போக்கு

தேவன் தமது பலத்த கரங்களினாலே எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்களை விடுவித்து வனாந்திர மார்க்கமாய் கானான் தேசத்தை நோக்கி அவர்களை வழி நடத்தின போது அவர்கள் கானான் தேசம் எப்படிப்பட்டது. என்பதை வேவு பார்ப்பதற்காகப் பன்னிரெண்டுபேரை அனுப்பினார். அதில் யோசுவாவும், காலேப்பும் மட்டுமே அத்தேசத்தைத் தங்களால் சுதத்தரித்துக் கொள்ள முடியும் என்கிற நற்செய்தியைக் கொண்டு வந்தார்கள். இவர்கள் இருவரும் தேவனிடத்தில் பக்திவைராக்கியமாயிருந்தார்கள். கானான் தேசத்தை வேவு பார்க்கப்போன மற்ற பத்துப்பேருக்கும் இவ்விருவர்களுமிடையே இருந்த ஒரே வித்தியாசம் தேவனுக்கான பக்திவைராக்கியம் தான். மற்ற பத்துப்பேரும் தேவன் எவ்வளவு பெரியவர் என்று பார்ப்பதை விட்டுவிட்டு தங்கள் சத்துருக்கள் எவ்வளவு பெரியவர்கள் என்பதைப் பார்த்தார்கள். நம் கவனம் தேவன் எவ்வளவு பெரியவர் என்பதிலிருந்து நம் பிரச்சனைகள் எவ்வளவு பெரியது என்பதற்கு திரும்பினால் தேவன் மீதான நம் உற்சாகம் குன்றிப்போய்விடும். தேவனுடைய காரியங்களில் நம் உற்சாகத்தை அதிகப்படுத்த தேவனுடைய

வல்லமையை தேவனுடைய வார்த்தையின் வல்லமையை நினைவில் கொள்ள வேண்டும் ( ரோமர் 1 : 16 ). நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மோடு இருப்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும் (மத். 28 : 20).

## II. தேவனைவிட மனிதனுக்கு அதிகம் பயப்படும் போக்கு

இஸ்ரவேல் ஜனங்கள் தேவன் எகிப்துக்குச் செய்ததை நினைத்துப்பார்க்கத் தவறினார்கள். அவர்கள் தேவனுக்குப் பயப்படுவதை விட கானான் தேசத்திலிருந்த சத்துருக்களுக்கு அதிகமாகப்பயந்தார்கள். நாமும்கூட பல நேரங்களில் நம் பெற்றோர்களுக்கு, நம் முதலாளிகளுக்கு தேவனை விட அதிகமாகப் பயப்படுகிறோம். அதன் விளைவு தலைக்குனிவு தான். நாம் மனிதர்களுக்கு பயப்படும்போது தேவனுக்காக உற்சாகமாகச் செயல்பட முடியாது. வசனங்களில் நாம் பார்க்கும் போது சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம் என்றும், தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள், எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே என்றும் விவரிக்கப் பட்டிருக்கிறது (மத்தேயு 10 : 28; பிரசங்கி 12 : 13 ). மனித பயம் நாம் தேவனுக்கடுத்த காரியங்களில் உற்சாகமாக ஈடுபட தடையாயிருக்க ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. இன்றைய நாட்களில் பெரும்பாலான வாலிபர்கள் தேவ பயமில்லாமல் தாறுமாறான வாழ்க்கை வாழ்கிறார்கள். நாம் அவர்களிடம் போய் நீதி நியாயம் நியாயத்தீர்ப்பு என்று பேசினால் அவர்கள் அதை வேற்றுக்கிரக வார்த்தைபோல் எண்ணி நம்மை ஏளனம் செய்கிறார்கள். இவ்வுலகத்தில் நடந்து கொண்டிருக்கும் அல்லது அரங்கேற்றப்படும் அநீதிகளுக்கெல்லாம் காரணம் தேவ பயமில்லாமைதான். நாம் தேவனைப் பற்றும் பயத்தோடு இவ்வுலகில் வாழ்ந்தால் சந்தோஷமும், சமாதானமும் உண்டாகும், நம் ஆயுசு நாட்களும் பெருகும்.

## III. தேவனுடைய கடந்த கால ஆசீர்வாதங்களை மறக்கும் மனப்போக்கு

இஸ்ரவேல் ஜனங்களை தேவன் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்த போது எப்படித் தம்முடைய பலத்த கரத்தினால் அவர்களை விடுவித்து, போஷித்து அவர்கள் தங்கள் சத்துருக்களை மேற்கொள்ளும்படி செய்தார் என்பதையெல்லாம் மறந்து விட்டார்கள். அதுதான் அவர்கள் தேவனுக்கடுத்த காரியங்களில் உற்சாகமில்லாமல் இருப்பதற்குக் காரணமாயிருந்தது. நம்முடைய உற்சாகமின்மைக்கும் இதுவே காரணமாக அமைகிறது. நமக்கு நடக்கும் நன்மைகள் எல்லாவற்றிற்கும் ஆதாரம் தேவன்தான். நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது (யாக்கோபு 1 : 17). நாம் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் நன்மைகள் ஏராளம், தாராளம். ஆனால் அந்த நன்மைகளுக்கு பாத்திரமாக நாம் நடந்து கொள்ளுகிறோமா? உலகப்பிரகாரமாக நாம்

பார்த்தால்கூட அரசாங்கத்திடமிருந்து நன்மைகள் பெறும் பயனாளிகள் சில தகுதியம்சங்களுக்கு உட்படவேண்டியதாயிருக்கிறது. அரசு விதிக்கும் அந்த தகுதியம்சங்களுக்கு ஒருவர் உட்படும்போது மட்டுமே அந்த நன்மைகளை பெற்றுக் கொள்ள முடியும். தேவனுடைய நன்மையான ஈவுகளை நாம் நினைத்துப் பார்த்து அவருக்கடுத்த காரியங்களில் நாம் உற்சாகமாக செயல்படவில்லையென்றால் நன்றி கெட்டவர்களாயிருப்போம். இந்த நன்றி கெட்ட இஸ்ரவேல் ஜனங்கள் பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்தை நோக்கி தேவனால் வழி நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் போது எகிப்தில் அவர்கள் புசித்த ஆகாரங்களை நினைத்துப் பார்த்தார்கள். ஆனால், ஆளோட்டிகளால் அடக்கப்பட்டதை, அடிக்கப்பட்டதை மறந்து போனார்கள். நாமும் கூட இவ்வுல கம் தரும் அற்ப சந்தோஷத்திற்காக தேவன் தரும் நித்திய ஜீவனை இழந்து போகிறோம், நாம் அப்படி செய்யலாகாது.

அருமையான வாலிபர்களே! நீங்கள் தேவனுடைய சித்தத்தைச் செய்ய பக்தி வைராக்கியமாயிருந்து ராஜ்ய விரிவாக்கப்பணியில் உற்சாகத்துடன் இருக்கிறீர்களா? தேவன் நம் சத்துருக்களோடல்ல நம்மோடு தான் இருக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நாம் மனிதபயத்தை உதறித்தள்ளிவிட்டு தேவ பயத்தோடு செயல்படுவோம். தேவன் நமக்கு கடந்த காலங்களில் செய்த நன்மைகளை நினைத்து அதற்கு நன்றியாயிருக்க வேண்டும். பிசாசு நம் உற்சாகத்திற்கு உலைவைக்கும் முயற்சியில் ஈடுபட்டு நம் பாதையில் பல தடைகளைக்கொண்டு வருவான். நாம் அத்தடைகளை தகர்த்தெறிந்து தேவ காரியங்களில் நம்மை முழுமையாக ஈடுபடுத்துவோம். தேவன் தாமே உங்கள் யாவரையும் அபரிதமாக ஆசீர்வதிப்பாராக! ஆமென். ●

## ஜாக்கிரதையாயிருங்கள்

உங்கள் எண்ணங்களைக் குறித்து ஜாக்கிரதையாயிருங்கள்;
ஏனென்றால் அவைகள்தான் வார்த்தைகளாகின்றன.

உங்கள் வார்த்தைகளைக் குறித்து ஜாக்கிரதையாயிருங்கள்;
ஏனென்றால் அவைகள்தான் செயல்களாகின்றன.

உங்கள் செயல்களைக் குறித்து ஜாக்கிரதையாயிருங்கள்;
ஏனென்றால் அவைகள்தான் பழக்கங்களாகின்றன.

உங்கள் பழக்கங்களைக் குறித்து ஜாக்கிரதையாயிருங்கள்;
ஏனென்றால் அவைகள்தான் உங்கள் குணங்களாகின்றன.

சிறுவர் பகுதி

# தாலந்து

*RAR Nayagam*

சிறுபிள்ளைகளே! இந்த இதழின் மூலம் உங்களை மீண்டும் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அனைவரும் நலமாக இருக்கிறீர்களா? நான் நலமாக இருக்கிறேன். சிறுவர் பகுதியின் மூலம் நீங்கள் நல்ல பாடங்களை கற்றுக்கொண்டு வருகிறீர்கள் என நம்புகிறேன்.

இந்த மாதம் நாம் தாலந்து பற்றி கற்றுக்கொள்வோம். மத் 25 : 14 - 30 வரை உள்ள வேதாகம பகுதியில் இயேசு கிறிஸ்து அங்கே கூடியிருந்த ஜனங்களிடம் ஒரு உவமையைச் சொன்னார். ஒரு எஜமான் தன் ஊழியக்காரரில் மூவரை அழைத்து அவர்கள் திறமைக்கேற்ப அவர்களுக்கு தாலந்துகளை கொடுத்தான். முதல் ஊழியக்காரனிடம் ஐந்து தாலந்தையும், அடுத்த ஊழியக்காரனிடம் இரண்டு தாலந்தையும், மூன்றாவது ஊழியக்காரனிடம் ஒரு தாலந்தையும் கொடுத்து விட்டு அந்த எஜமான் பிரயாணமாய் போய்விட்டான்.

வெகு காலம் கழித்து அந்த எஜமான் திரும்ப வந்து அந்த மூன்று ஊழியக்காரர்களிடமும் கணக்கு கேட்டான். அப்பொழுது ஐந்து தாலந்தை வாங்கிய ஊழியக்காரனையும், இரண்டு தாலந்தை வாங்கின ஊழியக்காரனையும் பாராட்டி, ஒரு தாலந்தை வாங்கின ஊழியக்காரனை கண்டித்தான். ஏன்? அதற்கான பதில் தான் இம்மாதம் நாம் கற்றுக் கொள்ளப் போகும் பாடம். (மத். 25 : 19 - 26).

ஐந்து தாலந்தை வாங்கின ஊழியக்காரனும், இரண்டு தாலந்தை வாங்கின ஊழியக்காரனும் தங்கள் தாலந்தைக் கொண்டு வியாபாரம் செய்து அதை இரட்டிப்பாக்கினார்கள். அதாவது ஐந்து தாலந்தை பத்தாகவும், இரண்டை நாலாகவும் மாற்றினார்கள். எனவே, அவர்களை பாராட்டி உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே என்று கூறினார். ஒரு தாலத்தை வாங்கினவன் அதை புதைத்து வைத்து வீணடித்து, தன் எஜமானிடத்தில் அதை அப்படியே திருப்பி கொடுத்தான். அப்பொழுது எஜமான் அவனை பார்த்து பொல்லாதவனும் சோம்பலுமான ஊழியக்காரனே என்று கண்டித்தான்.

பிள்ளைகளே! தேவன் நம் ஒவ்வொருவரிடமும் ஒரு திறமையை, தாலந்தை கொடுத்திருக்கிறார். உங்களில் சிலருக்கு பாடல் நன்றாக பாடும் தாலந்து, அதிக காரியங்களை ஞாபகம் வைத்துக் கொள்ளும் தாலந்து, நல்ல அறிவு என்று பலவிதமான தாலந்துகளை கொடுத்திருக்கிறார். அவை யெல்லாம், நாம் உபயோகித்து அதன் மூலமாக தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்த வேண்டும். தாலந்துகளை வீணாக்கக்கூடாது. நன்றாக தேவனை துதித்து பாடுங்கள். அதிகம் வேதவசனங்களை மனப்பாடம் செய்யுங்கள். வேத அறிவை பெருக்கிக்கொள்ளுங்கள். அப்பொழுது தேவன் உங்களையும் பாராட்டுவது மட்டுமல்ல அபரிதமாக ஆசீர்வதிப்பார்.

## மருத்துவ ஆலோசனை

# ஹைப்போ தைராய்டிஸம்
# *Hypothyroidism*

தைராய்டு சுரப்பி என்பது கழுத்து பகுதியில் உள்ள ஓர் உறுப்பு ஆகும். அதிலிருந்து சுரந்து வரும் தைராக்ஸின் ( thyroxine ) என்னும் ஹார்மோன் நம் உடலின் இயல்பான இயக்கத்திற்கு உதவுகின்றது.

தைராக்ஸின் அதிகமாகும்போது வரும் சுகவீனத்தை ஹைப்பர் தைராய்டிஸம் என்றும், குறைவின் போது வரும் சுகவீனத்தை ஹைப்போதைராய்டிஸம் என்றும் அழைக்கிறோம்.

ஹைப்போதைராய்டிஸம் பெண்களுள் அதிகமாக காணப்படுகிறது. இதினால் ஏற்படும் சுகவீனத்தைக் கண்டறிவது சற்று கடினம். ஏனென்றால், உடலில் ஏற்படும் தாக்கம் குறைவாகவே இருக்கும்.

### அறிகுறிகள் :

* சோர்வு – உடல் பலவீனம் – வறண்ட தோல்
* குளிரை தாங்க இயலாமல் இருத்தல்
* உடற்பருமன் – முடி உதிர்தல்
* குறைவான இதய துடிப்பு

### ஹைப்போதைராய்டிஸத்தினால் வரும் பாதிப்பு :

* இதய கோளாறு
* மகப்பேறு பிரச்சினை
* உடற்பருமன்
* மூட்டு வலி

இதை சரியான முறையில் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். அதற்கேற்ற வாழ்வு முறையை கடைபிடிக்க வேண்டும். அதைப்பற்றிய விளக்கங்களை அடுத்த இதழில் படித்து தெரிந்து கொள்ளுங்கள்.

Dr. Able, CMC. Vellore.

# வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்

*Henry Mohan*

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏராளமானவர்கள் மிகவும் நேசிக்கின்றார்கள். அவர் மீதுள்ள அன்பின் நிமித்தமாகவும், அவரை நேசிப்பதன் நிமித்தமாகவும் அவருடைய உபதேசங்கள் அடங்கிய வேதாகமத்தை எவ்வளவு விலையானாலும் விலையை பொருட்படுத்தாமல் வாங்குகிறார்கள். ஆனால், சிலர் அதை பத்திரமாக வைத்துக் கொள்ளுகிறார்கள், சிலர் அதை சில சந்தர்ப்பங்களில் பயன்படுத்துகிறார்கள். சிலர் அதை ஜெபநேரங்களில் பயன்படுத்துகிறார்கள், சிலர் அதை தினமும் வாசிக்கிறார்கள். பலமுறை முழு வேதாகமத்தையும் வாசித்து விட்டேன் என்று சந்தோஷப்படுகிறவர்களும் உண்டு. பிரியமானவர்களே நாம் வேதத்தை வாசிக்கிறவர்களாய் மாத்திரம் இராமல் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஆண்டவர் இயேசு வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் என்று தமது ஆலோசனையை நமக்கு தந்திருக்கிறார் ( யோ. 5 : 39 ). எனவே, நாம் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்ப்பது மிகவும் அவசியம். காரணம் உயிர்த்தெழுதல் இல்லை என்று சாதிக்கிற சதுசேயர் ஒருமுறை இயேசுவினிடத்தில் வந்து போதகரே ஒருவன் சந்தானம் இல்லாமல் இறந்துபோனால் அவனுடைய சகோதரன் அவன் மனைவியை விவாகம் பண்ணி, தன் சகோதரனுக்குச் சந்தானம் உண்டாக்க வேண்டும் என்று மோசே சொன்னாரே.

எங்களுக்குள்ளே சகோதரர் ஏழுபேர் இருந்தார்கள்; மூத்தவன் விவாகம் பண்ணி, மரித்து சந்தானமில்லாததினால் தன் மனைவியைத் தன் சகோதரனுக்கு விட்டுவிட்டுப் போனான் அப்படியே இரண்டாம் மூன்றாம் சகோதரன் முதல் ஏழாம் சகோதரன் வரைக்கும் செய்தார்கள். எல்லோருக்கும் பின்பு அந்த ஸ்திரீயும் இறந்து போனாள். ஆகையால், உயிர்த்தெழுதலில், அவ்வேழு பேரில் எவனுக்கு அவள் மனைவியாயிருப்பாள்? அவர்கள் எல்லோரும் அவளை விவாகம் பண்ணியிருந்தார்களே என்று கேட்டார்கள்.

இயேசு அவர்களுக்கு பிரதியுத்தரமாக : நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள் என்றார் (மத்தேயு 22:23-29).

ஆம்! அன்பானவர்களே இன்றைக்கும் அநேகர் வேத வாக்கியங்களையும் தேவனுடைய வல்லமையையும், தேவனுடைய சித்தத்தையும், தேவனுடைய திட்டங்களையும் அறியாமல் தப்பான எண்ணங் கொண்டவர் களாக மாறுபாடானவைகளை உபதேசித்து வருவதால் இயேசுவை மிகவும் நேசிப்பவர் களும் தேவனுடைய சித்தத்தை அறிய இயலாமல் தப்பான வழிகளில் நடக்கிறவர்களாக அழிவின் பாதையில் சென்றுக் கொண்டிருக்கிறார்களே என்று நினைக்கும்போது மிகவும் வருத்தமாக உள்ளது.

நீதிமொழிகள் 14 : 12-ல் மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள் என்று சாலோமோன் எழுதியிருக்கிறான்.

எனவே, இயேசுவின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்ப்போமா?.

வேத வாக்கியங்கள் தேவனுடைய மகிமையுள்ள சித்தத்தை நாம் உணர்ந்துக் கொள்ளும்படி நமக்காகவே எழுதப்பட்டிருக்கிறது.

1. வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது;

2. யாருக்காக அருளப் பட்டிருக்கிறது? தேவன் தம்முடைய மகிமைக்கென்று தம்முடைய சாயலாக சிருஷ்டித்து உருவாக்கி படைத்துள்ள தேவனுடைய மனுஷனுக்காக அருளப்பட் டிருக்கிறது.

3. எதற்காக அருளப்பட்டிருக்கிறது? தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கி ரியையுஞ் செய்ய தகுதியுள்ள வனாகவும் இருக்கும்படியாக அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துக் கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் நமக்கு பிரயோஜமுள்ளவைகளாயிருக் கும்படி அருளப்பட்டிருக்கிறது (II தீமோ 3 : 16, 17). எனவே, நாம் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

வேத வாக்கியங்கள் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்று இரண்டு பிரிவாக உள்ளது. இதைக் குறித்து தேவனுடைய திட்டத்தை அறியாமல் தப்பான எண்ணம் கொண்டவர்கள் மாறுபாடாக போதித்து வருகின்றனர். இதைக் குறித்து எபிரேயர் ஆசிரியர் எழுதுகிறார்.

எபிரேயர் 1 : 1-ல் பூர்வகாலங்களில் பங்கு பங்காக

வும், வகைவகையாகவும் தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்கு திருவுளம் பற்றினார். அதாவது, தேவன் தம்முடைய சித்தத்தை, திட்டங்களை தீர்க்கதரிசிகள் மூலமாய் பிதாக்களுக்கு தெரியப்படுத்தினார்.

எபிரேயர் 1 : 2-ல் இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்கு திருவுளம் பற்றினார். அதாவது, தேவன் தம்முடைய சித்தத்தை தமது திட்டங்களை இயேசு கிறிஸ்து மூலமாக நமக்கு தெரியப்படுத்தினார். தேவன் இந்த திட்டத்தை தீர்க்க தரிசிகளின் காலத்திலேயே தீர்க்கதரிசியாகிய மோசேயின் மூலமாக முன்னுரைத்திருக்கிறார்.

உபாகமம் 18 : 15-ல் மோசே: உன் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை ( இயேசுவை ) உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவார் அவருக்கு செவிகொடுப்பீர்களாக.

உபாகமம் 18 : 18, 19-ல் தேவன்: உன்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை (இயேசுவை) நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணி, என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன். நான் அவருக்கு கற்பிப்பதையெல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார். என் நாமத்தினாலே அவர் சொல்லும் என் வார்த்தைகளுக்குச் செவிக்கொடாதவன் எவனோ அவனை நான் ( தேவன் ) விசாரிப்பேன்.

மத்தேயு 17 : 5-ல் இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிக்கொடுங்கள் என்று மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று.

யோவான் 14 : 24-ல் இயேசு; நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது என்றார்.

எனவே, புதிய ஏற்பாட்டில் தேவன் வெளிப்படுத்தின அவருடைய திட்டங்களுக்கு மட்டுமே எல்லோரும் செவிசாய்க்க வேண்டும் என்பதே தேவனுடைய சித்தம் என்பதை நாம் உணர்ந்துக் கொள்ள வேண்டும். எனவே, வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தால் மட்டுமே தேவனுடைய திட்டங்களை அறிந்து அவருடைய அன்பிற்கு பாத்திரமாய் நடந்து கொள்ள முடியும். வேத வாக்கியங்களை தொடர்ந்து ஆராய்ந்து பார்க்க தேவன் கிருபை செய்வாராக.

●

# நாம் தேவனைக் கோபப்படுத்துவோமா?

Bro. Pandian

ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துதலும் சமாதானமும் உண்டாவதாக. யாராகிலும் நம் மீது கோபமாயிருப்பதை நாம் யாரும் விரும்பமாட்டோம். அதிலும் நாம் மிகவும் மதிக்கிற ஒருவர் நம் மீது கோபப்பட்டால், நம் நடத்தையைப் பற்றி நாமே வருத்தப்படுவோம். அதை எப்படியாவது சரி செய்ய முயற்சி செய்வோம். இப்படியிருக்க நமக்கு ஜீவனையும், சுவாசத்தையும், சகலத்தையும் கொடுக்கிற தேவன் நம்மீது கோபப்பட்டால் நம் நிலைமை என்னாவது? அதற்காகத்தான் அவருக்கு என்னபிடிக்கும், எது பிடிக்காது மற்றும் நாம் என்ன செய்தால் தேவனுக்கு கோபம் வரும் என்பதை பற்றியெல்லாம் நாம் தெரிந்துகொள்ளவே இஸ்ரயேல் ஜனங்களின் நடவடிக்கைகளை வேதத்தில் நமக்காகப் பதிவு செய்து வைத்திருக்கிறார்.

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து அற்புதவிதமாக விடுதலையாக்கப்பட்டு கானானுக்கு செல்லும் வழியில் ஜனங்கள் தேவனின் அன்பையும், வல்லமையையும் மறந்து தேவனுக்கும் மோசேக்கும் விரோதமாக பேசினர். அது தேவனுக்குக் கோபமூட்டியபடியால் அவர்களை அழிப்பதற்குப் பதிலாக 40 வருட வனாந்திர அலைச்சலில் அவர்களை போகச்செய்து அவர்களுடைய சந்ததிகள் வளர்ந்து ஆளாகச் செய்து கானானுக்கு கொண்டு போனார். அந்த சந்ததிகளுக்கு தேவனுடைய நியாயப் பிரமாணங்களை நினைவூட்டவே உபாகமம் எழுதப்பட்டது. எனவேதான், யாத்திராகமத்தில் சொல்லப்பட்டக் கட்டளைகளும் மற்றும் பல நிகழ்வுகளும் இப்புத்தகத்தில் கோடிட்டுக் காட்டப்படுகிறது. அப்படியான ஒரு வசனப்பகுதியே (உபா 9:22).

தபேராவிலும், மாசாவிலும், கிப்ரோத் அத்தாவாவிலும் கர்த்தருக்குக் கடுங்கோபம் உண்டாக்கினீர்கள். தொடர்ந்து மோசே பேசும் போது, நான் அறிந்த நாள் முதற்கொண்டு நீங்கள் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் பண்ணுகிறவர்களாயிருந்தீர்கள். என்கிறார். அப்படியிருக்க மோசேக்குறிப்பிட்ட அந்த மூன்று சம்பவங்களை மட்டும் இப்போது சற்றுப் பார்ப்போம்.

முதலாவது தபேரா:- இந்த எபிரெய வார்த்தைக்கு கர்த்தருடைய அக்கினி பற்றியெரிந்தது என்று அர்த்தமாம் (எண் 11 : 3) நாம் இந்தப்பகுதியை வாசிக்கும் போது ஜனங்கள் தொடர்ந்து முறையிட்டுக் கொண்டிருந்தது (Complain) கர்த்தருக்குக் கோபத்தைத் தூண்டிவிட்டது என்று காண்கிறோம். தேவன் அவர்களைக் கானான் தேசம் சேர்க்க, அதாவது கட்டி முடிக்கப்பட்ட

வீடுகள், பண்படுத்தப்பட்ட நிலங்கள், செழிப்பான செழிப்பான விளைச்சல்கள், கொழுமையான ஆடு மாடுகள், செல்வங்கள் நிறைந்த – பாலும் தேனும் ஓடுகிற அந்த தேசத்தில் சேர்க்கவே தேவன் அவர்களை வழிநடத்திச் சென்றார். ஆனால் அவர்கள் சந்தித்த தற்காலிக துன்பம், உபத்திரவம் போன்றவை அவர்களை முறையிடச்செய்தது. இது கற்பாறையில் விதைக்கப்பட்ட விதைகளைப்போல் இருதயக்கடினத்தால் இடறல் அடையும் மக்களைக்குறிக்கும். நம்முடையக்கிறிஸ்தவ வாழ்க்கையிலும் நாம் சந்திக்கும் பிரச்சனைகள் மத்தியில் நாம் பேசும் வார்த்தைகள் ஒருவேளை தேவனைக் கோபப்படுத்தலாம். ஆகவே நமக்கு நேரிடும் பிரச்சனைகள் நீங்கும்படி அவரிடம் தாழ்மையாக வேண்டிக்கொள்ளலாமேத் தவிர எரிச்சல்பட்டுத்தகாத வார்த்தைகள் பேசுவோமானால் நாமும் இஸ்ரயேல் ஜனங்களைப்போல் முறையிடுகிறவர்களாகத்தான் இருப்போம். மனுஷனின் மதியீனம் அவன் வழிகளைத் தாறுமாறாக்கும், அவன் மனமோ கர்த்தருக்கு விரோதமாகத் தாங்கலடையும் என்று நீதி 19 : 3 – ல் காண்கிறோம். தேவனுடைய ஆலோசனைகளை மறந்து நடக்கும்போது, நாம் சிலசிக்கல்களில் சிக்கிக்கொள்ளும்போது தேவனைக்குறை சொல்வது அவருக்கு கோபத்தை வருவிக்குமல்லவா? பாவத்திற்கு வரும் தண்டனையைக் குறித்து மனுஷன் முறையிடுவானேன் என்று புலம்பல் 3:39 – ல் வாசிக்கிறோம். மனுஷன் மதுபானம், புகைப்பிடித்தல், போதைப்பாக்கு, புகையிலைமெல்லுதல் போன்ற கெட்ட பழக்கங்களுக்கு அடிமையாகி தன் சரீரத்தைக் கெடுத்துக்கொள்கிறான். அதினால் வரும் வியாதிகளுக்கு ஜெபித்தால் அது ஞானமான காரியமல்ல. நம் சரீரம் தேவனுடைய ஆலயமாயிருக்கிறது ஒருவன் அதைக் கெடுத்தால் தேவன் அவனைக் கெடுப்பார் (I கொரி 3 : 17) ஆகவே விளையாட்டாக ஆரம்பித்து பின்பு அடிமைப்படுத்தும் அவ்விதமான பழக்கவழக்கங்களுக்கு வாலிபப் பிள்ளைகள் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். இல்லையெனில் தேவகோபத்திற்கு ஆளாக நேரிடும். நம் சபை வாழ்வும் ஒரு விதத்தில் வனாந்திர யாத்திரை பேன்றதுதான். நாம் பரமக்கானானை நோக்கி சென்று கொண்டிருக்கிறோம். ஆகவே தேவ கோபம் பற்றி எரியாதபடி கிறிஸ்துவின் அன்பில் நிலைத்திருப்போம்.

இரண்டாவதாக மாசா என்ற எபிரெய வார்த்தைக்கு வாக்குவாதம் என்று பொருள். இஸ்ரயேலர் செங்கடலை கடந்து சீன்வனாந்திரத்திலுள்ள ரெவிதீம் என்ற இடத்திற்கு வந்தபோது ஜனங்களுக்கு தண்ணீர் கிடைக்காததினால் மோசேயிடம் வாதாடினார்கள். அதற்கு மோசே அவர்களை நோக்கி என்னோடே ஏன் வாதாடுகிறீர்கள், கர்த்தரை ஏன் பரீட்சைப் பார்க்கிறீர்கள் என்றான் (யாத் 17:2) பரீட்சை பார்த்தனல் என்பதற்கா எபிரெய வார்த்தையே மேரிபா. நமக்கு கிடைக்க வேண்டியது கிடைக்காமல் போகும் போது நாம் நமக்கு மேலானவர்களிடம் வாதாடுவது எவ்விதத்திலும் தேவனைக் கோபமூட்டுதலாகவே உள்ளது. பெற்றோர்கள், ஆசிரியர்கள், அதிகாரிகள்

மற்றும் சபை ஊழியர்கள் ஆகியோரிடம் வாதாடுவது தேவனைப்பரீட்சை பார்ப்பதற்குசமம். நம் தேவைகள் சந்திக்கப்பட நாம் தேவனிடம் ஜெபித்து காத்து இருப்பதே வேதம் காட்டும் வழியாகும். அதனால் கிறிஸ்தவர்கள் பொதுவாக வேலை செய்யுமிடத்திலோ, அல்லது அரசாங்கத்திற்கு எதிராகவோ, போராடுவது. உண்ணாவிரதம், மறியல், ஸ்டரைக் போன்றவற்றில் ஈடுபடுவது தேவனுக்கு ஏற்புடையதல்ல, மேலான அதிகார முள்ளவர்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க புதிய உடன்படிக்கை நம்மை வழிநடத்துகிறது. ரெவிதீமில் கோலினால் அடித்து தண்ணீர் வந்த இடத்தில் ஜனங்கள் கடிந்து கொள்ளப்பட்டார்கள். சுமார் 40 வருடம் கழித்து அதே சீன் வனாந்திரத்தில் வடக்கு பக்கம் உள்ள காதேஸ் என்ற இடத்தில் தேவன் கன்மலையைப் பார்த்து பேசச் சொன்னார். ஆனால் ஜனங்களின் டார்ச்சர் தாங்கமுடியாமல் மோசே கன்மலையை இரண்டுதரம் அடித்துவிட்டான் இங்கே மோசேயையும், ஆரோனையும் நோக்கி தேவன், நீங்கள் கானானில் பிரவேசிப்பதில்லை என்ற மாபெரும் அதிர்ச்சியைத்தந்தார் (எண்20 : 12) எனவே தேவனுடைய வாக்கு தத்தங்களை மதியாமல் அவிசுவாசத்தினால் தேவனை பரீட்சை பார்க்கும் காரியத்திற்கு நாம் எச்சரிக்கையாக இருப்போம். அகந்தையினால் மாத்திரம் வாது பிறக்கும் என்று நீதிமொழிகள் சொல்கிறது. ஆகவே சீஷர்களைப் போல் தங்களில் யார் பெரியவன் என்ற வாக்குவாதத்தை விட்டு குடும்பத்திலும், வேலை செய்யுமிடத்திலும், சபையிலும் நாம் மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் மேன்மையாக எண்ணுவோம். வாக்குவாதம் செய்தல் மாம்சத்திற்குரியது (I கொரி 3.3) ஆனால் சிலர் அதை மேதாவித்தனமாக எண்ணுவதால் தேவனுடைய கோபத்திற்கு ஆளாகிறார்கள். ஞானத்தில் சாலொமோனைக்காட்டிலும் பெரியவரான இயேசு ஆண்டவரைப்பற்றி வேதம் குறிப்பிடும் முக்கியப்பண்புகளில் சில அவர் வாக்குவாதம் செய்யவுமாட்டார், கூக்குரலிடவுமாட்டார். அவருடைய சத்தத்தை ஒருவனும் வீதிகளில் கேட்பதுமில்லை (மத் 12 : 19) ஆனால் தெருக்களில் சிலர்போடும் கூச்சலால் ஆண்டவரின் நாமம் தூஷிக்கப்படுவது வேதனையான விஷயமாகும். (1 cor 10:9 ல்) கிறிஸ்துவைப் பரீட்சை பார்த்து சிலர் பாம்புகளால் அழிக்கப்பட்டார்கள் என்ற நிகழ்ச்சி (எண் 21 : 4 - 6) வனாந்திர வழியினிமித்தம் ஜனங்கள் சேர்ந்து தேவனுக்கும், மோசேக்கும் விரோதமாகப் பேசினதால் கொள்ளிவாய்ச் சர்ப்பங்களினால் அழிக்கப்பட்டார்கள். அதுபோல நாமும் நமக்கு வரும் சோதனைகளைத் தாங்காமல் புலம்பி தேவனைப்பரீட்சை பாராதிருப்போமாக. தேவனை நோக்கிக் கேள்வி கேட்பதும், பெற்ற தகப்பனை நோக்கி ஏன் பெற்றாய்? என்பவனுக்கும் ஐயோ (ஏசா45 : 9,10) என்கிறது வேதம்

மூன்றாவதாக கிப்ரோத் அத்தாவா இது இச்சித்த ஜனங்களை அடக்கம் செய்த இடம் என்று பொருள்படும். ( எண் 11:34 ) தங்கள் பிரயாணத்தில் தாகத்திற்கு தண்ணீரையும், பசிக்கு மன்னாவையும் எந்தவித உடல் உழைப்பு

மில்லாமல் பெற்றுகொண்ட ஜனங்கள் நாவின் ருசிக்காக ஆசைப்பட்டு இறைச்சி வேண்டும் என்று அழுது ஆர்ப்பாட்டம் செய்தனர். அவர்களுக்குள் வாசம் செய்த அந்நிய ஜனங்களே இப்படிச்செய்யத் தூண்டினார்கள் (எண் 11 : 4 - 6) அது தேவனுக்கு கோபத்தை உண்டாக்கியது. எனவே தான் அவர்கள் கேட்ட இறைச்சியைக் கொடுத்துவிட்டு பின் தண்டனையாக வாதையால் வாதித்தார் எண் 11 : 33). எனவே தான் அவிசுவாசியுடன் விசுவாசிக்கு பங்கு இல்லை என்று அப். உபதேசம் போதிக்கின்றது. ஆனால், தந்திரமான இந்த உலகம் நட்பு என்ற போர்வையில் வெள்ளாடுகளையும், செம்மறியாடுகளையும் ஒன்றாக இணைக்கப்பார்க்கிறது. ஆனால், வருகைகயால் அவைகள் வலது, இடதாகப்பிரிக்கப்படும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது, எகிப்து தேசத்திற்கு திரும்பிப் போனால் நலமாயிருக்கும் என்று இஸ்ரயேலர் ஜனங்கள் அழுது எதுவரைக்கும் இந்த ஜனங்கள் எனக்குக் கோபம் உண்டாக்குவார்கள்? எண் 14:11 என்றார். காரணம் தேவன் அந்த ஜனங்களின் கண்களுக்கு முன்பாக அநேக அடையாளங்களை நடத்திக் காண்பித்தும் அவர்கள் அவரை விசுவாசியாதபடியால் தேவன் கோபம் கொண்டார். நாமும் கூட நம் எதிர்காலத்தை தேவன் ஆசீர்வதிப்பார் என்ற வாக்குதத்தங்களைக் கேட்டும் இஸ்ரயேல் ஜனத்தைப்போல் - பாலும், தேனும் ஓடும் தேசத்தைக்கண்டு சந்தோஷமடைவதற்கு பதிலாக, அங்குள்ள உயரமான ஜனங்களுக்கு பயந்ததைப்போல் - பிரச்சனைகள் சோதனைகள் கண்டு பயப்படுகிறோம். அன்புள்ள விசுவாசியே பயம் விசுவாசத்திற்கு எதிரானது என்பதை உணர்ந்து அதைப்புறம்பே தள்ளுவோம். உலகத்திலிருப்பவனிலும் உங்களில் இருப்பவர் பெரியவர் என்ற வார்த்தையை உணர்ந்து நம்பிக்கையாய் வாழப்பழகுவோம். எதுவரைக்கும் என்று தேவன் கேட்பது நாம் இன்னும் விசுவாசத்தில் வளரவில்லையே என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறது. சபையில் இருப்பவர்கள் உலகத்தாரைப் போல் அல்லாமல், நாம் தேவனுடைய வசனங்களைக் கேட்டு உணர்ந்து வளர்ச்சியடைவதால் உலகக்கவலைகள், ஐசுவரியத்தின் மயக்கம், மற்றவைகளைப்பற்றி உண்டாகிற இச்சைகள் நம் உள்ளத்தில் பிரவேசியாதபடிக்கு எச்சரிக்கையாய் இருப்போம். மாற் 4:18 நாம் இரட்சிக்கப்படுவதற்கு முன்பு கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம். இப்போது விசுவாசிகளான பின், விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான் என்ற நமதாண்டவரின் வாக்குதத்திற்கு சொந்தக்காரர் ஆகிறோம். ஆகவே நமது அவயங்களில் போர்செய்யும் இச்சைகளே சண்டைக்குக் காரணம் என்று உணர்ந்து, ஆத்துமாவுக்கு விரோதமாகப்போர் செய்யும் மாம்ச இச்சைகளை விட்டு விலகுவோம். கோணலும் மாறுபாடான சந்ததியில் எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமல் செய்வோம் (பிலி 2:15,16). எனவே ஆரம்பத்தில் கொண்ட நம்பிக்கையை முடிவு பரியந்தம் உறுதியாய் பற்றிக்கொண்டு தேவனை கோபமூட்டாதிருப்போம் (எபி 3: 14-16) கிறிஸ்துவின் கிருபை நம்மனைவரோடுங் கூட இருப்பதாக ஆமென்.

●

வசன நீதியான கிறிஸ்துவின் சபை

# நல்ல சமாரியன்

Bro. Basker

**இ**யேசு கிறிஸ்துவுக்குள் வாழும் அன்பான வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவரின் நாமத்தினாலே வாழ்த்துக்கள். இந்த மாதத்தில் நித்திய ஜீவனை நாம் பெற நம் வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய காரியத்தை பார்ப்போமாக!

## I. உவமை

ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகையில் கள்ளர் கையில் அகப்பட்டான். அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்து கொண்டு அவனைக் காயப்படுத்தி குற்றுயிராக விட்டுப்போனார்கள். அப்பொழுது தற்செயலாய் ஒரு ஆசாரியன் அந்த வழியே வந்து அவனைக் கண்டு பக்கமாய் விலகிப்போனான். அந்தப்படியே ஒரு லேவியனும் அந்த இடத்துக்கு வந்து அவனைக் கண்டு பக்கமாய் விலகிப்போனான். பின்பு ஒரு சமாரியன் ஒருவன் பிரயாணமாய் வருகையில் அவனை கண்டு மனதுருகி கிட்ட வந்து அவனுடைய காயங்களைக் கட்டி அவனை தன் சுய வாகனத்தின் மேல் ஏற்றி சத்திரத்துக்குக் கொண்டுபோய் அவனைப் பராமரித்தான். மறு நாளிலே தான் புறப்படும்போது இரண்டு பணத்தை எடுத்து சத்திரத்தான் கையில் கொடுத்து நீ அவனை விசாரித்துக்கொள் அதிகமாய் ஏதாகிலும் இவறுக்காக செலவழித்தால் நான் திரும்பி வரும்போது அதை உனக்குத் தருவேன் என்றார். இப்படியிருக்க கள்ளர் கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்று போரில் எவன் பிறனாக இருந்தான் உனக்கு எப்படித் தோன்றுகிறது என்றார். அதற்கு அவன் அவனுக்கு இரக்கம் செய்தவனே என்றார். அப்பொழுது இயேசு நீயும் போய் அந்தப்படியே செய் என்றார்.( லூக் 10:25-37 ).

## II. சுய நலமுள்ள வழிப்போக்கர்

எருசலேமிலிருந்து எரிகோவுக்குச் செல்லும் பாதை மிகவும் கரடுமுரடானது அநேக வளைவுகளும் முடுக்குகளும் காணப்படும். இதில் திருடர்கள் நடமாட்டம் அதிகம். பிரயாணம் செய்யும் அநோகர் கள்ளரால் தாக்கப்பட்டு இப்பாதையில் குற்றுயிராகக் கிடப்பது வழக்கம். இந்த உவமையில் வரும் வழிப்போக்கர் ஆசாரியனும், லேவியனும் ஒரே இனம் குற்றுயிராகக் கிடப்பவனும் அவர்களுடைய இனத்தைச் சார்ந்தவன். சமாரியன் வேறு இனமாக இருந்தான். அதாவது குற்றுயிராகக் கிடப்பவனுக்கு அன்னியனாக இருந்தான். அவனுக்கு பிறராக இருந்தான். இந்த உவமையில் வரும் திருடர்கள் உன்னுடைய தெல்லாம் என்னுடையது என்று கொள்கையுடையவர்களாகவும்,


அசாரியனும், லேவியனும் என்னுடைது எல்லாம் எனக்குரியது என்ற கொள்கை உடையவர்களாகவும் இருந்தனர். ஒரு நாள் அந்த வழியில் ஒருவனை திருடர்கள் காயப்படுத்தி வஸ்திரங்களை உரிந்து அவனை குற்றுயிராக விட்டுப்போனார்கள் அப்பொழுது அந்த வழியாய் ஒரு ஆசாரியன் அவனைக் கண்டு அவனை விட்டுவிலகிப்போனான் அப்படியே லேவியனும் அவனைக்கண்டு அவனைவிட்டு விலகிப்போனான். இவர்கள் இருவரும் வேதாக வார்த்தைகள் அறிந்தவர்கள். அப்படி இருந்தும் சுயநலமுள்ள வழிப்போக்கராக இருந்தனர். இன்றும் அநேகர் வேதாகம வார்த்தைகள் அறிந்தும் மற்றவர்களுக்கு சரீர, பொருளாதார உதவிகளைச் செய்யாமல் தங்களின் பாரம்பரிய சபைகளுக்கு சென்று கொண்டிருப்பதைக் காணலாம். இவர்களுக்கு நியாயப் பிரமாணமும், ஆண்டவர் இயேசுவும் அப்போஸ்தலரும் போதித்துள்ளனர் (உபா. 22 : 1, யாக். 4 : 17, மத். 12 : 12). நாம் மற்றவர்களுக்கு உதவ முன் வர வேண்டும். சுய நலமுள்ள வழிப் போக்கராக காணாதவர் போல இருக்கக் கூடாது.


## III. மனதுருகி உதவியவன்


சமாரியன் ஒருவன் அந்த வழியாய் வரும் போது குற்றுயிராகக் கிடப்பவனைக் கண்டு மனதுருகி அவன் காயங்களுக்கு எண்ணெய் (மருந்து) போட்டு கட்டினான். தன்னுடைய வாகனத்தில் ஏற்றி சத்திரத்திற்கு ( மருத்துவமனை) அழைத்து வந்து அன்று அவனுடன் தங்கினான். மறுநாளிலே அவனை தொடர்ந்து கவனி, அதிகமாய் செலவழித்தால் என்னிடம் சொல் திரும்பி வரும்போது அதை திருப்பி கொடுத்து விடுகிறேன் என்றான். அந்த நல்ல சமாரியனிடம் கருணை உள்ளம் இருந்தது. உதவிகளைச் செய்யும் கரங்கள் இருந்தன நன்மை செய்யும் கால்கள் இருந்தன முன் பின் தெரியாதவருக்கு செலவழிக்கும் பணப்பை இருந்தது நம்பகமான உறுதி மொழி கூறும் வார்த்தைகள் அவன் வாயில் இருந்தது. நமக்கு எல்லாம் இருக்கிறது போல பிறருக்கு உதவிகளைச் செய்யும் கரங்கள் இருக்க வேண்டும் (யாக். 2 : 25 ). முதலாவது தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் சபையைத் தேடும் கால்கள் இருக்க வேண்டும் (2 கொரி. 8 : 11). சுவிசேஷம் சொல்லும் வாய் இருக்க வேண்டும் ( மாற் 16 : 15 ). இவையெல்லாம் செய்து முடித்து பிறருக்கு உதவிகளைச் செய்ய வேண்டும் ( 1 யோ. 3 : 17, 18 ; யாக். 2 : 15 - 17 ). இவையெல்லாம் செய்யாமல் முடமாக இருந்தால் நித்திய ஜீவனைப் பெறுவது எப்படி? ஆண்டவர் இயேசு நீயும் அப்படியே செய் என்று சொன்னார் அல்லவா? (லூக் 10 : 37) நாமும் அந்த நல்ல சமாரியனைப் போல நன்மை செய்வோமாக!



●




12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும்.
தேவைக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.








# World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin in Tamil On Tamilan TV
Monday 7:00 - 7:15 am
Thursday 9:30 - 10:00 pm
Saturday 7:15 - 7:30 am




Arjunan In Tamil
TV : Every Monday 6:00 - 6:15 am and
Every Saturday 6:15 - 6:30pm on Tamilan TV
Radio : Every Saturday 5:30- 5:45 pm on Sri Lanka Radio

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam:
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley in Tamil:
Tamilan Tv : Sunday 6:45 - 7:00 pm
Friday 6:00 - 6:30 am



P.R. Swamy & Douglas:
Every Sunday to Wednesday At 5:30 - 5:45 pm
on 25 And 49 Meter bend of Sri Lankan Radio


Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm


Thang Lien in Manipur:
Hornbill Cable, Channel No.1
6:00 - 7:00 pm, Sunday, Tuesday, Thursday, Saturday.

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15, 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026

Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2015-2017
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2015-2017**


# எங்களது இதர வெளியீடுகள்







சர்வதேச தரத்தில், தலை சிறந்த பிரசங்கிகளால் எழுதப்பட்ட **சத்தியத்தின் குரல்** என்ற நூல் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்

**தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்**









## திருமறை தியானம்

### தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |





## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்


- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.



இயக்குனர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

**Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.**
**Editor. S. Rajanayagam.**